Asmt_IIT_004_T



ශ්‍රී ලංකා දේශීය ආදායම්
இலங்கை உள்நாட்டு இறைவரி
Sri Lanka Inland Revenue

வருமான விபரத்திரட்டு, அட்டவணைகள் மற்றும் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் கூற்று என்பனவற்றை நிரப்புவதற்கான வழிகாட்டி

தனியாள்

வரிமதிப்பீட்டாண்டு
2024/2025

இந்த வழிகாட்டி பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது

A. பொது அறிவுறுத்தல்கள்

B. விபரத்திரட்டு படிவத்தினை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

C. சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் கூற்றினை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

A. பொது அறிவுறுத்தல்கள்

1. இந்த ஆவணம் இரு பகுதிகளை உள்ளடக்கியது

   I. விபரத்திரட்டு படிவம்

      (i) வருமான விபரத்திரட்டு

      (ii) வருமான விபரத்திரட்டு – அட்டவணைகள்

   II. சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கூற்று (A/L)

   ஒவ்வொரு தனியாளும் விபரத்திரட்டு படிவத்தையும் (வருமான விபரத்திரட்டு மற்றும் அட்டவணைகள்) சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளினதும் கூற்றினையும் நிரப்புதல் வேண்டும்.

கோப்பிடும் முறை

1. 2023 ஆம் ஆண்டு 04 ம் இலக்க உள்நாட்டு இறைவரி திருத்த சட்டத்தினால் திருத்தப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 113 (1ஆ) இன் பிரகாரம், 2023 ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பிக்கும் வரிமதிப்பீட்டாண்டு முதல் செயல்வலுப்பெறும் வகையில் வரி விபரத்திரட்டுக்களை (இலத்திரனியல் ஊடாக விபரங்களை கோப்பிடல்) (அனைத்து தனியாள் வரிசெலுத்துனர்களுக்கும் கட்டாயமானதாகும்)

எனவே, தனியாட்கள் எவரும் குறித்துரைக்கப்பட்ட படிவத்தினை அச்சுப்பிரதி செய்து எழுத்துவடிவில் விபரத்திரட்டினை சமர்ப்பிக்க தகுதியுடையவராகமாட்டார்.

உள்நாட்டு இறைவரித்திணைக்கள வலைத்தளம் ஊடாக இ-கோப்பிடிவதற்கான வசதிகள் மேறகொள்ளப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு www.ird.gov.lk இனை பார்க்கவும்.

2. வருமான விபரத்திரட்டு ,அட்டவணைகள் மற்றும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கூற்று என்பனவற்றை நிரப்புவதற்கு முன்னர் இவ் வழிகாட்டியை வாசிக்கவும்.

3. **வதிவுள்ள நபர்கள் மற்றும் வதிவற்ற நபர்கள் 2024.04.01 தொடக்கம் 2025.03.31 வரையிலான** காலப்பகுதிக்கு ஊழியம், வியாபாரம், முதலீடு மற்றும் ஏனைய மூலங்களிலிருந்தான வருமானம் (மனை சூரிய கலங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியினை வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் உட்பட) தொடர்பாக **2024/2025** வரிமதிப்பீட்டாண்டிற்குரிய வருமான விபரத்திரட்டில் வெளிப்படுத்த தேவைப்படுத்தப்படுகின்றனர்.

4. **வதிவுள்ள நபரின்** வரி மதிப்பிடற்பாலதான வருமானமானது மூலம் எவ்விடத்தில் எழுந்த போதிலும் அவ்வாண்டுக்கான ஊழியம், வியாபாரம், முதலீடு மற்றும் ஏனைய மூலங்களிலிருந்தான வருமான மூலங்களில் இருந்து (மனை சூரிய கலங்கள் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியினை வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் உட்பட) அந் நபருக்கு கிடைக்கும் வருமானத்திற்கு சமமானதாக இருக்க வேண்டியதுடன் வதிவற்ற நபர் தொடர்பில் ஊழியத்தின் மூலம், வியாபாரத்தின் மூலம், முதலீட்டின் மூலம் அல்லது வேறு வருமான மூலங்கள் ஊடாக அந் நபருக்கு கிடைக்கும் வருமானத்திற்கு சமமானதாக இருக்க வேண்டும்.

5. நீங்கள் விரும்பும் மொழியில் வருமான விபரத்திரட்டு உங்களுக்கு அனுப்பப்படுகின்றத உங்கள் **விருப்பு மொழியை** மாற்ற விரும்பின் உங்களது தகவல்களை இற்றைப்படுத்துவதற்காக

தலைமை காரியாலயத்தின் அல்லது ஏதேனும் பிராந்திய அலுவலகத்தை தொடர்பு கொண்டு உங்கள் வரிசெலுத்துநர் சுயவிபரக்கோவையை இற்றைப்படுத்தல் வேண்டும்.

6. **வருமான விபரத்திரட்டின் அல்லது அட்டவணைகளில் தரவுகளை நிரப்பும் கூடுகளில் நிரப்ப தேவைப்படாதவிடத்து உரிய நிரலில்** *"*பொருத்தப்பாடற்றது*"* அல்லது ஹைபன் *(-)* குறியீடு போன்றவை எவற்றையும் எழுத்தில் **எழுதுதல் ஆகாது**.

அட்டவணை அல்லது அட்டவணையின் ஒரு பகுதி தேவைப்படவில்லை/பொருத்தப்பாடற்றதெனில் – ஏற்புடையதன்று - என அட்டவணைக்கு குறுக்கே அல்லது அட்டவணையின் அந்த பகுதிக்கு குறுக்கே எழுதவும்

அட்டவணையில் எழுதுவதற்கு வழங்கப்பட்டுள்ள இடம் போதுமாக காணப்படாதவிடத்து **"இணைப்பை பார்க்கவும்"** என குறிப்பிட்டு அத்தரவுகளை தரப்பட்ட வடிவமைப்பிற்கு ஒத்த வடிவமைப்பில் பிறிதொரு இணைப்பாக வழங்கப்படுதல் வேண்டும்.

- **தரவுகளை சரியாக நிரப்புவதற்கான உதாரணம்**

*(*வரிசெலுத்துநருக்கு வியாபார வருமானம் மாத்திரம் காணப்படும் இடத்து*)*

பிரிவு *– 01:* **வரி கணிப்பீட்டு கூற்று**

பகுதி *A* **–வரிக்கு பொறுப்புடைய வருமானம்**

ஊழிய வருமானம்	*(அட்டவணை1)*	**10**												
வியாபார வருமானம்	*(அட்டவணை2)*	**20**			**2**	**6**	**5**	**8**	**5**	**0**	**0**	**0**	**0**	**0**
முதலீட்டு வருமானம்	*(அட்டவணை3)*	**30**												
ஏனைய வருமானம்	*(அட்டவணை4)*	**40**												
வரிமதிப்பிடற்பாலதான வருமானம் *(10+20+30+40)*		**50**			**2**	**6**	**5**	**8**	**5**	**0**	**0**	**0**	**0**	**0**

7. ஏற்டையவாறு பூரணப்படுத்தப்பட்ட விபரத்திரட்டுக்கள் (வருமான விபரத்திரட்டுக்கள் மற்றும் கட்டாயமான அட்டவணைகள்) ஏனைய ஆவணங்கள் என்பவை 2025 நவம்பர் 30ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமாபிப்பதற்கு அனைத்து தரப்பினருக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

8 உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது தனியாள் வருமான வரி விபரத்திரட்டு மற்றும் கட்டாயமான அட்டவணைகளை சமர்ப்பிப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் **இணையதள முகப்பினூடாக - இலத்திரனியல் சேவையை** வழங்கிவருகின்றது.

9. **வரிக் கொடுப்பனவு**

தவணை வரிசெலுத்துநர் ஒருவர், வரி மதிப்பீட்டாண்டுக்கான வரியை வரிமதிப்பீட்டாண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட செலுத்தப்பட வேண்டிய வரிக்கூற்றுக்கு அமைவாக காலாண்டுத் தவணைக் கொடுப்பனவு மற்றும் இறுதிக் கொடுப்பனவுகளைச் செலுத்துதல் வேண்டும்.

2024/2025 ஆம் வரி மதிப்பீட்டாண்டுக்கான காலாண்டு தவணை செலுத்தப்பட வேண்டிய திகதி மற்றும் கொடுப்பனவுக் குறியீடு என்பன பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

தவணை	கொடுப்பனவுத் திகதி (அன்று அல்லது அதற்கு முன்னர்)	கொடுப்பனவுக் குறியீடு
1	15 ஆகஸ்ட் 2024	24251
2	15 நவம்பர் 2024	24252
3	15 பெப்ரவரி 2025	24253
4	15 மே 2025	24254
இறுதி	30 செப்தெம்பர் 2025	24250

நான்கு தவணைகள், இறுதிக் கொடுப்பனவு மற்றும் ஏற்புடைய வரி வரவுகள் என்பவற்றின் மொத்தம் *2024/2025* வரி மதிப்பீட்டாண்டின் மொத்த வரிப் பொறுப்புக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்.

10. தண்டப் பணம், வட்டி மற்றும் சிறைத்தண்டனை

பிழையான வருமான விபரத்திரட்டினை சமர்ப்பித்தல் அல்லது உரிய தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் வருமான விபரத்திரட்டினை சமர்ப்பிக்கத் தவறுதல் அல்லது வருமான விபரத்திரட்டினை சமர்ப்பிக்காதிருத்தல் என்பவற்றுக்கு, **தண்டப்பணம் அல்லது சிறைத் தண்டனை** விதிக்கப்படும்.

உரிய தினத்தில் வரி செலுத்தத் தவறின் கீழ்வரும் **தண்டப்பணத்திற்கும் வட்டிக்கும்** ஆளாவீர்கள்*:*

- **தாமதமாக வருமான வரி விபரத்திரட்டினைக் கோவையிடல்**

(i) செலுத்த வேண்டிய வரித் தொகையின் *5%* வீதத்துடன், மேலும் கோவையிடத் தவறும் ஒவ்வொரு மாதமும் அல்லது மாதத்தின் பகுதிக்கும் செலுத்த வேண்டிய வரியின் *1%* வீதம்*:* மற்றும்

(ii) ரூபா *50,000/-* உடன் மேலும் *2025* நவம்பர் *30* இற்கு பின்னர் தொடர்ந்துவரும் ஒவ்வொரு மாதமும் அல்லது ஒரு மாதத்தின் ஒரு பகுதிக்கு, மேலதிகமாக ரூபா *10,000/-* மும்

என்பவற்றுள், அதிகமான தொகைக்குச் சமமான தண்டப்பணத்துக்கு உட்படுதல் வேண்டும்.

- **உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான கூற்றொன்றை** வழங்குவதற்கான தண்டமானது ரூபா *50,000* அல்லது அக் கூற்றினை அடிப்படையாக கொண்டு தீர்மானிக்கப்பட்ட செலுத்த வேண்டிய வரிக்குறைப்புத் தொகை அல்லது மீளப்பெற வேண்டிய தொகையின் அதிகரிப்பு, ஆகிய தொகைகளில் **எத்தொகை அதிகமானதோ அத் தொகையாகும்.**

- **விபரத்திரட்டினை கோவையிட தவறும்** ஒரு நபர் ரூபா *1* மில்லியனை விஞ்சாத தண்டப்பணத்திற்கு அல்லது ஓராண்டு காலத்தை விஞ்சாத

சிறைத்தண்டனைக்கு அல்லது அத் தண்டப்பணம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாக வேண்டியேற்படும்.

- குறிப்பிட்ட காலப்பகுதியிற்காக வரி முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியேனும் செலுத்தத்தவறின்;

- உரிய திகதியில் **தவணைக் கொடுப்பனவு** ஒன்றினை செலுத்த தவறின் செலுத்தப்பட வேண்டிய ஆனால் செலுத்தப்படாத வரியின் *10%* இற்கு சமனான தண்டப்பணத்தை செலுத்த பொறுப்புடையவராவார்.
- ஒரு வரிக் காலப்பகுதிக்கு உரிய திகதியன்று அல்லது வரி மதிப்பீட்டு அறிவித்தலில் குறிபிடப்பட்டுள்ள கொடுப்பனவுத் திகதியன்று செலுத்த வேண்டிய வரி மீதி இருப்பின், செலுத்தப்பட வேண்டிய ஆனால் செலுத்தப்படாத வரியின் *20%* இற்கு சமமான தண்டப்பணத்தை செலுத்த பொறுப்புடையவராவார்
- உரிய தினம் தொடக்கம் வரி செலுத்தும் காலப்பகுதி வரை ஒவ்வொரு மாதமும் அல்லது மாதம் ஒன்றின் பகுதிக்கு *1.5%* வட்டிக்கும் பொறுப்புடையவராவார்.

11. **குறிப்பிடப்பட்ட படிவம்** – விபரத்திரட்டு படிவமானது *2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் *126* ஆம் பிரிவின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் உரியவாறு குறிப்பிடப்படுவதுடன் *2024/2025 (2024* ஏப்ரல் *1* முதல் *2025* மார்ச *31* ஆம் திகதி வரையிலான காலப்பகுதி*)* ஆம் வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமானம் மற்றும் ஏனைய விபரங்களை வெளிப்படுத்தவும் தேவைப்படுத்தப்படுகின்றது.

B. விபரத்திரட்டு படிவத்தினை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

I. வருமான விபரத்திரட்டினை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

- இப் பகுதி இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது;

  பிரிவு *1* - வரி கணிப்பீட்டுக் கூற்று
  பிரிவு *2* – வெளிப்படுத்தல்

பிரிவு *1* – வரி கணிப்பீட்டுக் கூற்று

- இப் பிரிவு ஐந்து பகுதிகளை உள்ளடக்கியது;

  பகுதி ***A*** – வரிக்கு பொறுப்புடைய வருமானம்
  பகுதி ***B*** – வரி மதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்தான கழிப்பனவுகள்
  பகுதி ***C*** – செலுத்தப்படத்தக்க வரி கணிப்பீடு
  பகுதி ***D*** – விலக்களிக்கப்பட்ட வருமானம் / நீக்கப்பட்ட வருமானம்
  பகுதி ***E*** - கட்டாயமான அட்டவணைகள்

விபரத்திரட்டின் **"பிரிவு *1*"** இனை நிரப்புவதற்கு முன்னர், ஏற்புடைய அட்டவணைகள் நிரப்பப்படுதல் வேண்டும்.

அதன் பிரகாரம், **வருமான விபரத்திரட்டு - அட்டவணைகளை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களை** பின்பற்றி பின்னர் வருமான விபரத்திரட்டின் மீதமுள்ள பகுதிகளை அட்டவணையில் காட்டப்பட்டவாறு பூர்த்தி செய்யவும்.

வருமான விபரத்திரட்டின் பகுதி		**ஏற்புடைய கூடு**
பகுதி *A* வரிமதிப்பிடற்பாலதான வருமானம்	-	கூடு *50*
பகுதி *B* மொத்த நிவாரணங்கள்	- -	கூடு *90* கூடு *110*

வரிமதிப்பிடற்பாலதான வருமானத்திலிருந்தான மொத்த கழிப்பனவுகள் வரியிடற்பாலதான வருமானம்		கூடு *120*
பகுதி *C*		
செலுத்தப்படத்தக்க மொத்த வரி	-	கூடு *170*
செலுத்தப்படத்தக்க வரி மீதி	-	கூடு *190*
கோரப்பட்ட மீளளிப்பு	-	கூடு *200*
பகுதி *D*		
மொத்த விலக்களிக்கப்பட்ட வருமானம்	-	கூடு *210*
பகுதி *E*		
கட்டாயமான அட்டவணைகள்	-	

- வருமான விபரத்திரட்டு அல்லது வருமான விபரத்திரட்டின் ஒரு பகுதி அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் அடங்கலாக கொடுப்பனவு அடிப்படையில் வேறு எவரேனும் நபரினால் தயாரிக்கப்பட்டுள்ளதெனில் "ஆம்" என அடையாளம் இடுக இல்லை எனில் "இல்லை" என அடையாளம் இடுக. "ஆம் என அடையாளமிடப்பட்டிருப்பின் **வெளிப்படுத்தலின் பகுதி** *– A* இனை பூரணப்படுத்தி, அவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களை இணைக்கவும் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் ஈடுபட்டுள்ளார்கள் எனில் மேலே குறிப்பிட்டுள்ள விபரங்களை பூரணப்படுத்துவதற்கு பிறிதொரு தாளைப் பயன்படுத்துவதுடன் அதனை விபரத்திரட்டுடன் இணைக்கவும்.
- உள்நாட்டு இறைவரி சட்டத்தின் *126(4)* ஆம் பிரிவின் பிரகாரம், வரி செலுத்துநர் அல்லது வரி செலுத்துநரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர், விபரத்திரட்டு சரியானது எனவும் பூரணமானது எனவும் உறுதிப்படுத்தி கையொப்பமிடல் வேண்டும்.

  ஆகவே, வரிசெலுத்துநர் அல்லது வரிசெலுத்துநரினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர், **வெளிப்படுத்தலின் பகுதி** ***B*** இல் அவரது பெயரைக் குறிப்பிட்டு கையொப்பமிடல் வேண்டும்.

- நீங்கள் விபரத்திரட்டினை இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்கும் போது மற்றும் அட்டவணையின் உண்மையான கூடுகளில் உள்ள தொகைகளை சரியாக உள்ளிடும்போது, விபரத்திரட்டில் தொடர்புடைய கூட்டினைக் கணக்கிட்டு நிரப்ப வேண்டிய அவசியமில்லை மற்றும் தொடர்புடைய அட்டவணைகளை கைமுறையாக நிரப்ப வேண்டும் .இந்தக் கூடுகளுக்கான தொகைகள் சரியாகக் கணக்கிடப்பட்டு தானாகவே நிரப்பப்படும்.

II. வருமான விபரத்திரட்டு – அட்டவணைகளை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

- கீழ்வரும் அட்டவணைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் www.ird.gov.lk என்ற வலைதளத்தில் காணப்படுகின்றது. **வருமான விபரத்திரட்டு மற்றும் ஏற்புடைய அட்டவணைகளை நீங்கள் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

அட்டவணை *1* – ஊழிய வருமானம்
அட்டவணை *2* – வியாபார வருமானம்
அட்டவணை *3* – முதலீட்டு வருமானம்
அட்டவணை *4* – ஏனைய வருமானம்
அட்டவணை *5* – தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் மற்றும் செலவின நிவாரணம்
அட்டவணை *6* – இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள் மீதான நிறுத்திவைத்தல் வரி
அட்டவணை *7* – முற்பண வருமான வரி / நிறுத்திவைத்தல் வரி
அட்டவணை *8* – வரி கணிப்பீடு
அட்டவணை *9* – வரி வரவுகள்
அட்டவணை *10* – நட்ட சீராக்கம்

மேற்கூறப்பட்ட அட்டவணைகளில் **உங்களுக்கு ஏற்புடைய** அட்டவணைகளை மாத்திரம் தேர்ந்தெடுத்து பூரணப்படுத்தவும்.

விபரத்திரட்டினை நிரப்புவதற்கு ஒருங்கிணைவாகக் காணப்படும் அட்டவணைகள், **கட்டாயமான அட்டவணைகளாக** கருதப்படும். கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை, கட்டாயமான அட்டவணைகளாக கருதப்படும் சில சந்தர்ப்பங்களை குறிக்கின்றது.

தனியாள் வருமானம்		அட்டவணைகள்									
		1	2	3	4	5	6	7	8	9	10
1	ஊழிய வருமானம்	√				√			√	√	
2	வியாபார வருமானம் மாத்திரம்		√						√	√	
3	வியாபார வருமானம் மற்றும் இறுதி நிறுத்திவைத்தல் வரி உடனான முதலீட்டு வருமானம்		√	√			√		√	√	
4	நிறுத்திவைத்தல் வரி/ முற்பண வருமான வரியுடன் முதலீட்டு வருமானம் மாத்திரம்			√				√	√	√	
5	தகைகையளிக்கும் கொடுப்பனவுடன் ஏனைய வருமானம் மற்றும் ஆண்டுக்குள் இலங்கைக்கு அனுப்பப்பட்ட நாணய அளவு				√	√			√	√	
6	இறுதி நிறுத்திவைத்தல் வரி மற்றும் நிறுத்திவைத்தல் வரி/ முற்பண வருமான வரியுடனான ஊழிய வருமானம், வியாபார வருமானம், முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானம்	√	√	√	√		√	√	√	√	
7	மு/கொ/வ நட்டம்/ அவ் வருடத்தின் போதான நட்டத்துடன் வியாபர வருமானம் மட்டும்		√								√

அட்டவணை *5*, **அட்டவணை** *6* **மற்றும் அட்டவணை** *7* என்பவை மேலே குறிப்பிட்ட அட்டவணைகளுக்கு மேலதிகமாக முறையே ஏதேனும் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள், இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவின் மீதான நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரி என்பவற்றை கோரும்/ வெளிப்படுத்தும் தனியாளொருவருக்கு அத்தியாவசியமானதாகும்.

2. அட்டவணைகளை நிரப்புவதற்கு பின்வரும் படிகளைப் பின்பற்றவும்

படி *1* – தங்களது வருமான மூலம் அல்லது கோரப்படும்வருமான மூலம் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வரி கோரிக்கைகளுக்கான கட்டாயமான அட்டவணைகளை தெரிவு செய்யவும்.

படி *2* – கட்டாயமான அட்டவணைகளை பூரணப்படுத்தி அறிவுறுத்தல்களின் பிரகாரம் அட்டவணைகளிலுள்ள தொகைகளை விபரத்திரட்டிற்கு கொண்டு செல்லவும்.

அட்டவணை *1-* **ஊழிய வருமனாம்**

1. **விலக்கப்பட்ட தொகைகள்** ஏதேனும் இருப்பின் அவற்றை கழித்த பின்னர் ,உண்மை அடிப்படையில் **ஊழிய வருமானத்தை** *(*ஊழியம் மற்றும் முடிவுறுத்தல் நன்மைகள்*) (T10* படிவத்துக்கு அமைவாக தேறிய ஊதியம் *)* பதியவும்.

   **A* என பெயரிடப்பட்ட முதன்மை ஊழிய வருமானம் மற்றும் முடிவுறுத்தல் நன்மைகளினை மற்றும் **B* என பெயரிடப்பட்ட இரண்டாம் நிலை ஊழிய வருமானம் மற்றும் முடிவுறுத்தல் நன்மைகளினை வெளிப்படுத்த தனித்தனி வரிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

   (ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டாம் ஊழியத்திலிருந்தான ஊதியம் அல்லது ***முடிவுறுத்தல் நன்மைகள்*** காணப்படின் அட்டவணை *1* இல் வழங்கப்பட்டுள்ள மேலதிக வரிகளை பயன்படுத்தவும் - கூடுகள் *101* மற்றும் *106.)*

2. *2024,* ஏப்ரல் *01* முதல் *2025* மார்ச் *31* வரையிலான – **காலப்பகுதிக்கானது.**

3. **நிரல்** *104* இன் கூட்டுத்தொகையை *105* **ஆம் கூட்டிலும், நிரல்** *109* **இன்** கூட்டுத்தொகையை விபரக்கூட்டினுள்*110***ஆம் கூட்டிலும்** பதியவும்

4. *1* ஆம் அட்டவணையின் *110***ஆம் கூட்டில்** உள்ள தொகையை *8* **ஆம் அட்டவணையின்** *802.1***ஆம் கூட்டிற்கு** கொண்டு செல்லவும்.*"*

5. அதன் பின்னர் *105* **ஆம் கூட்டினதும்** *110***ஆம் கூட்டினதும்** கூட்டுத் தொகையை இந்த அட்டவணையின் *111* **ஆம் கூட்டில்** பதியவும். *111* **ஆம் கூட்டில்** உள்ள தொகையை **வருமான விபரத்திரட்டின் கூடு** *10* **- ஊழிய வருமானத்திற்கு** கொண்டு செல்லவும்.

6. **விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட தொகைகள்** - ஊழிய வருமானத்துடன் தொடர்புடைய விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட

தொகைகளின் விபரங்களை **அட்டவணை** *1* **இன் பகுதி** *II* **இல் வெளிப்படுத்தவும்** .

*(*விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட வருமானங்களின் தொகைகளிணை நிரல் இந்த வழிகாட்டியின் இறுதியில் **இணைப்பு** *2* இல் தரப்பட்டுள்ளது *)*

இறுதியாக கூடு *115* இலுள்ள ஊழிய வருமானத்தின் மொத்த விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட **வருமான விபரத்திரட்டின் கூடு** *210* – **மொத்த விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட வருமானத்தில் பதியவும்**.

*[*விலக்களிக்கப்பட்ட /விலக்கப்பட்ட வியாபார வருமானம் *(*கூடு *216* **அட்டவணை** *2)* மற்றும்/அல்லது விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட முதலீட்டு வருமானமும் *(*கூடு *317* **அட்டவணை** *3)* இருப்பின் அவற்றை விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட ஊழிய வருமானத்துடன் கூட்டி *(*கூடு *115)* மொத்த தொகையை **வருமான விபரத்திரட்டின் மொத்த விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட வருமானம் - கூடு** *210* இற்கு கொண்டு செல்லவும்.*]*

அட்டவணை *2* – வியாபார வருமானம்

- ***ஏக உரிமைத்துவம், பங்குடமையிலிருந்தான பங்காளரின் வியாபார வருமானம் மற்றும் நம்பிக்கை நிதியத்திலிருந்தான பயன்பெறுநரின் வியாபார வருமானம்*** *ஆகிய பிரிவுகளிலிருந்து பெறப்படும் வியாபார வருமானங்களை வெவ்வேறாக பெற்றுக்கொள்ளுங்கள்.*

1. மேலே கூறப்பட்ட வியாபார வருமானத்தின் விபரங்களை*2* **ம் அட்டவணையின் பகுதி** *I* **இன்** *211 ,210 ,207 ,206 ,205 ,202 ,201* **மற்றும்** *212* **ம் நிரல்களின்** உரிய வரிசைகளில் மேற்கூறப்பட்ட வியாபார வருமானத்தின் விபரங்களை வெளிப்படுத்தவும் .

2. *204, 209* **மற்றும்** *214***ம் கூடுகளின்** கூட்டுத்தொகையை *215***ம் கூட்டிற்கு** கொண்டு செல்லவும். *215***ம் கூட்டிலுள்ள** தொகையை **"வருமான**

விபரத்திரட்டின் வியாபார வருமானத்தின் *20*ம் **கூட்டிற்கு** கொண்டு செல்லவும் – *வியாபார வருமானத்தின் கீழ் உள்ளடக்கவும்.*

3. **விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட தொகைகள்** - வியாபார வருமானத்துடன் தொடர்புடைய விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட தொகைகளை **அட்டவணை** *2* **இன் பகுதி** *II* இல் வெளிப்படுத்தவும்

(இந்த வழிகாட்டியின் இறுதியில் **பின்னிணைப்பு** *2 இல் விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட தொகைகளின் பட்டியல் தரப்பட்டுள்ளது)*

இறுதியாக *216* ஆம் கூட்டிலுள்ள மொத்த விலக்களிக்கப்பட்ட வியாபார வருமானத்தை **வருமான விபரத்திரட்டின்** மொத்த விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட வருமானத்திற்கான *210* ம் கூட்டில் பதியவும்.

*[*விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட ஊழிய வருமானம் *(*கூடு *115)* மற்றும்*/* அல்லது விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட முதலீட்டு வருமானம் *(*கூடு *317)* இருப்பின் அவற்றை விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட வியாபார வருமானத்துடன் கூட்டி *(*கூடு *216)* மொத்த தொகையை *210*ம் கூட்டிற்கு கொண்டு செல்லவும்.*]*

அட்டவணை *3* – முதலீட்டு வருமானம்

01. **ஏக உரிமைத்துவம், மற்றும் பங்குடமையிலிருந்தான முதலீட்டு வருமானத்தின் பங்காளரின் பங்கு மற்றும் நம்பிக்கைப்பொறுப்பின் முதலீட்டு வருமானத்தின் பயன்பெறுநரின் பங்கு** ஆகியவற்றிலிருந்து பெறப்படும் முதலீட்டு வருமானத்தை வெவ்வேறாக பெற்றுக்கொள்ளவும் .அவற்றினை *3***ஆம் அட்டவணையின் பகுதி** *I* **இன்** ஏற்புடைய கூடுகளில் பதியவும் .

02. பின்னர் ,மேற்கூறப்பட்ட பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட பின்வரும் முதலீட்டு வருமானத்திலிருந்தான வருமானத்தை வெவ்வேறாக உறுதி செய்யவும் .

- வட்டி வருமானம்
- வாடகை வருமானம்
- முதலீட்டு சொத்துக்களின் தேறிப்பெறுகையில் இருந்தான ஈட்டுகை – மூலதன ஈட்டுகை
- பங்கிலாபம்
- வேறு ஏதேனும் முதலீட்டு வருமானம்

03.

அ. பங்கிலாப வருமானம் – வதிவுள்ள ஆள்

2024, ஏப்பிரல் *01* அன்று ஆரம்பிக்கும் வரிமதிப்பீட்டாண்டின் பங்கிலாபத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள், *15%* இல் வரியிடப்படுதல் வேண்டும்.

ஆ பங்கிலாப வருமானம் – வதிவற்ற ஆள்

2024, ஏப்பிரல் 01 அன்று ஆரம்பிக்கும் வரிமதிப்பீட்டாண்டின் பங்கிலாபத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள், 15% இல் வரியிடப்படுதல் வேண்டும்.

4. **கூடுகள்** *304, 309* **மற்றும்** *314* இன் கூட்டுத் தொகையினை *315* **கூ ஆம்***315* **ஆம் கூட்டினுள் உள்ளடக்கவும். 315 கூட்டின்** தொகையினை **வருமான விபரத்திரட்டின்** *30* **ஆம் கூட்டில் உள்ளடக்கவும்** . இந்த தொகை **முதலீட்டு வருமானத்திலிருந்தான** வருமானமாக காணப்படும் .

நிவாரணங்கள்

- **வாடகை வருமானத்திற்கான நிவாரணம்**

  மொத்த வாடகை வருமானத்தின் *25* வீத தனிநபர் முதலீட்டு சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானத்தில், நிவாரணமாகக் கழிக்கப்படலாம்.

  அத்தகைய தொகைகளை **அட்டவணை** *3* இன் **பகுதி** *II* இல் *316* **ஆம் கூட்டில்** பதியவும். பின்னர் இத் தொகையை **வருமான விபரத்திரட்டின்** *60* **ஆம் கூட்டிற்கு** கொண்டு செல்லவும்.

5. முதலீட்டு வருமானத்துடன் தொடர்புடைய **விலக்களிக்கப்பட்ட தொகைகளின்** விபரங்களை **அட்டவணை** *3***இன் பகுதி** *III* இல் வெளிப்படுத்தவும் .

*(*இந்த வழிகாட்டியின் இறுதியில் **பின்னிணைப்பு** *2* இல் விலக்களிக்கப்பட்ட தொகைகளின் பட்டியல் தரப்பட்டுள்ளது*)*

இறுதியாக **அட்டவணை** *1* **இன்** *115* **ஆம் கூடு** *(* **விலக்களிக்கப்பட்ட / விலக்கப்பட்ட ஊழிய வருமானம்), அட்டவணை** *2* **இன்** *216* **ஆம் கூடு** *(***விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட வியாபார வருமானம்***)* மற்றும் **அட்டவணை** *3* **இன்** *317* **ஆம் கூடு** *(***விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட முதலீட்டு வருமானம்***)* என்பவற்றின் கூட்டுத் தொகையினை **வருமான விபரத்திரட்டின் மொத்த விலக்களிக்கப்பட்ட/ விலக்கப்பட்ட வருமானத்திற்கான** *210* ஆம் கூட்டில் பதியவும்.

6. வட்டி வருமானம்/பங்கிலாப வருமானம்/வாடகை லொத்தரிலிருந்தான வெற்றித் தொகை, பந்தயம் அல்லது சூதாட்டத்திலிருந்தான வெற்றித் தொகை/வருமானத்தில் கழிப்பனவு/ஏனைய முதலீட்டு வருமான கழிப்பனவு விதிப்பனவு/அரசுரிமைப் பணம்/கட்டுப்பணம் அல்லது அதை ஒத்த உற்பத்தி இயற்கை வளக் கொடுப்பனவு – மேற்கூறப்பட்ட வெவ்வேறான வட்டி வருமானம் உண்மை அடிப்படையில் கருதப்படுதல் வேண்டும்.

அட்டவணை *4* – ஏனைய வருமானம்

1. தேசிய மின் வழங்கள் தொகுதியிற்கு மின்சாரத்தினை வழங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம் உட்பட ஏனைய வருமானத்தின் விபரங்கள் 401 ஆம் வரியில் தொடர்புடைய வரிசைகளில் பதியவும் .

2. *403* **ஆம் கூட்டினுள்** உள்ள தொகைகளை **வருமான விபரத்திரட்டின்** *40***ஆம் கூட்டினுள் பதியவும்.**

3. *406 e* **ஆம் கூட்டினுள்** *உள்ள* தொகையினை **விபரத்திரட்டின்** *210* **ஆம்ல் பதியவும்**

அட்டவணை 5 – தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் & நிவாரணம்

தகைமையளிக்கும் கொடுப்பனவுகளின் பட்டியல் **" பின்னிணைப்பு 3"** இல் தரப்பட்டுள்ளது.

"அட்டவணை 5" இல் நான்கு உப அட்டவணைகள் காணப்படுகின்றன.

- **அட்டவணை** ***5A*** – இந்த வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் *(2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம், *2021* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க திருத்தச் சட்டம் மற்றும் *2022* ஆம் ஆண்டின் *45* ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரம்*)*

- **அட்டவணை** ***5B*** – *2023/2024*ஆம் வரி மதிப்பீட்டாண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் ***(2018.04.01 இற்கு முன்னரான தகைகையளிக்கும் கொடுப்பனவுகளிலிருந்து*** – *2006* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம்*)*

- ***அட்டவணை 5C*** –இவ் வருடத்தில் வதிவுள்ள ஆளொருவரினால் அவரது வளவில் மேற்கொள்ளப்பட்ட சூரிய கலங்கள் பொருத்துவதற்கான செலவினத்திற்கு *(2021* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க திருத்தப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின பிரகாரம் *(ஒவ்வொரு வருடத்திற்கும் உயர்ந்தபட்சம் ரூபா 600,000/- அல்லது உண்மையான செலவினம் என்பவற்றுள் குறைவான தொகை))*

- ***அட்டவணை 5D*** - சினிமா படக் கைத்தொழில் மீதான செலவினத்திற்கு *(சினிமா அரங்கை நிருமாணித்தல் மற்றும் கருவிகளை பொருத்துதல் அல்லது மேம்படுத்தல் என்பவற்றிற்கான செலவினங்கள் (2021* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க திருத்தப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம்*)).*

➢ தகைமையளிக்கும் கொடுப்பனவுகள்

1. ஏதேனும் தகைமையளிக்கும் கொடுப்பனவுகள் காணப்படின் அவற்றினை ***அட்டவணை 5A*** மற்றும் ***அட்டவணை 5B*** இன் ஏற்புடைய கூடுகளில் பதியவும்

2. **அட்டவணை** *05* **இன் நிரல்** *503* மற்றும் *507* இன் கூட்டுத்தொகையை முறையே **கூடு** *504* மற்றும் **கூடு** *509* இற்கு கொண்டு செல்லவும் .

3. **அட்டவணை** *5D* இன் *523* ஆம் கூட்டிலுள்ள தொகையை **அட்டவணை** *5A* இன் *503.5* ஆம் கூட்டிற்கு கொண்டு செல்லவும்.

4. பின்னர் *504* **ஆம் கூட்டினதும்** *509* **ஆம் கூட்டினதும்** கூட்டுத்தொகையை கழிக்கப்படற்பாலதான தகைமையளிக்கும் கொடுப்பனவுகளை அடைவதற்காக *510* **ஆம் கூட்டிற்கு** கொண்டு செல்லவும்.

5. *510* **ஆம் கூட்டிலுள்ள** தொகையை **வருமான விபரத்திரட்டின்** *100* **ஆம் கூட்டிற்கு** கொண்டு செல்லவும். இந்த தொகையானது, இந்த வரி மதிப்பீட்டாண்டிற்கான கழிக்கப்படற்பாலதான தகைமையளிக்கும் கொடுப்பனவின் மொத்த தொகையாக காணப்படும்.

அட்டவணை 6 – இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகளின் மீதான நிறுத்திவைத்தல் வரி

இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள், இறுதியற்ற நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள் மற்றும் பிரயோகிக்கத்தக்க வரி வீதங்கள் என்பனவற்றின் அட்டவணை **பின்னிணைப்பு** *4* இல் தரப்பட்டுள்ளது.

1. **அட்டவணை** *6* ஆனது பின்வருமாறு இரண்டு உப அட்டவணைகளை கொண்டுள்ளது;

   - **அட்டவணை** *6A* – இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவு - நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி
   - **அட்டவணை** *6B* – இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவு - நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கத்தவறிய நிறுத்திவைத்தல் வரி

2. **அட்டவணை** *6A* – **இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள் – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரி** –

நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரிக்கான ஒவ்வொரு இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவின் விபரங்களை ***601*** **முதல்** ***606*** **வரையிலான நிரல்களின்** கீழ் பதியவும். கழிக்கப்பட்ட **மொத்த இறுதி நிறுத்திவைத்தல் வரியினை கூடு** ***607*** இல் பதியவும்.

3. **அட்டவணை** ***6B*** **– இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள் – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கத்தவறிய நிறுத்திவைத்தல் வரி**

நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்க பொறுப்புடையதாக இருந்த போதும் முகவரினால் கழிக்கப்படாத நிறுத்திவைத்தல் வரியின் விபரங்களை **அட்டவணை** ***6B*** **இன்** ***608*** **முதல்** ***613*** **வரையிலான நிரல்களின்** கீழுள்ள தரப்பட்ட வரிகளில் பதியவும். ***612*** **ஆம் நிரலின் கூட்டுத் தொகையை** ***614*** **ஆம் கூட்டில்** பதியவும்.

இறுதியாக **கூடு** ***614*** இலுள்ள தொகையை **அட்டவணை** ***8*** **– வரி கணிப்பீட்டின் கூடு** ***811*** இற்கு கொண்டு செல்லவும்.

அட்டவணை 7 – முற்பண வருமான வரி (மு.வ.வ - AIT) / நிறுத்திவைத்தல் வரி (நி.வை.வ. - WHT)

1. இந்த அட்டவணை கீழ் வருமாறு மூன்று உப அட்டவணைகளை கொண்டுள்ளது;

A. அட்டவணை 7A – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்ட முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரி

B. அட்டவணை 7B – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கத் தவறிய நிறுத்திவைத்தல் வரி

C. அட்டவணை 7C – பங்குடமையிலிருந்தான முற்பண வருமான வரி

2. முற்பண பெறுகைகள் அடங்கலாக நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் விபரங்களை பின்வருமாறு பதியவும்*;*

முற்பண வருமான வரி / நிறுத்திவைத்தல் வரி கொடுப்பனவு	அட்டவணை	ஏற்புடைய நிரல்கள்/கூடு
A. முற்பண வருமான வரி/ நிறுத்திவைத்தல் வரி – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்டது	அட்டவணை *7A*	நிரல்கள் *701* இலிருந்து *706* வரை
B. நிறுத்திவைத்தல வரி – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்க தவறியது	அட்டவணை *7B*	நிரல்கள் *712* இலிருந்து *717* வரை
C. பங்குடமையிலிருந்தான முற்பண வருமான வரி	அட்டவணை *7C*	கூடு *723, 724*

3. பெறுகைகளின் வெவ்வேறு மூலம் மற்றும் வகைகளுக்கு தனித்தனி வரிகளை பயன்படுத்தவும். *(*உ+ம் வாடகை, சேவைக் கட்டணம், அரசுரிமைப் பணம் பேன்றவை*).* மூலங்களை குறிப்பிடும் போது,

- பெறுகை வியாபார வருமானமாக இருப்பின் ***B*** எனக் குறிப்பிடவும்,
- பெறுகை முதலீட்டு வருமானமாக இருப்பின் ***I*** எனக் குறிப்பிடவும்.

பெறுகையின் வகையை குறிப்பிடும் போது, வருமான வகை வாடகையாக இருப்பின் *R* எனக் குறிப்பிடவும்.

அதன் பிரகாரம் **நிரல்** *701* **இன் .*1* முதல் .*5* வரையிலான வரிகள்** வெவ்வேறு மூலம் மற்றும் வகைகளுக்கு பின்வருமாறு காணப்படும்*;*

உ+ம். வியாபாரத்திலிருந்தான வாடகை வருமானம் – *B* - வாடகை
முதலீட்டிலிருந்தான வாடகை வருமானம் – *I* - வாடகை

4. அட்டவணை *7A* **– முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரி – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்டவை**

i. ஒவ்வொரு முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரி கழிப்பனவுகளின் விபரங்களையும் *(*முற்பண கொடுப்பனவின் மீதான முற்பண வருமான வரி/ நிறுத்திவைத்தல் வரி அடங்கலாக*)* **அட்டவணை** *7A* **இன்** *701* **முதல்** *706* **வரையிலான நிரல்களின்** கீழ் பதியவும்

ii. **கூடு** *706* **– நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்ட முற்பண வருமான வரி /நிறுத்திவைத்தல் வரியின் மொத்தத்தை கூடு** *707* **இல்** பதியவும். *2024/2025* ஆம் வரி மதிப்பீட்டாண்டிலிருந்தான **முற்பண**

பெறுகை மீதான முன்கொண்டு வரப்பட்ட முற்பண வருமான வரி / நிறுத்திவைத்தல் வரி என்பவற்றினை கூடு *708* இல் பதியவும்.

iii. **கூடு** *707* **மற்றும் கூடு** *708* இன் கூட்டுத் தொகையை **கூடு** *709* இல் பதியவும்.

பின்வருமாறு தெரிவு செய்திருப்பின்;

2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டிலுள்ள மொத்த முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரியை கோர தெரிவு செய்திருப்பின், **கூடு** *709* இலுள்ள தொகையை **கூடு** *710* இல் பதியவும். மொத்த வரவை கோருவதற்கு **கூடு** *710* இலுள்ள தொகையை **அட்டவணை** *9* **இன் கூடு** *908* இல் பதியவும். பின்னர் **கூடு** *711* இலுள்ள தொகை பூச்சியமாக காணப்படும; அல்லது

பின்வருமாறு தெரிவு செய்திருப்பின்;

எதிர்வரும் வரி மதிப்பீட்டாண்டுகளில் கழிக்கப்படுவதற்கு முற்பண பெறுகைகள் மீது நிறுத்திவைத்தல் வரி முன்கொண்டு செல்ல தெரிவு செய்திருப்பின், இந்த வரி மதிப்பீட்டாண்டில் மொத்த கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியினை **கூடு** *707* இல் பதியவும். முற்பண பெறுகை மீது கழிக்கப்பட்ட முன்கொண்டுவரப்பட்ட முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரி **கூடு** *708* இல் பதியப்படுதல் வேண்டும். *2023/2024* ஆம் வரி மதிப்பீட்டாண்டிற்கான முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரி *(***கூடு** *710)* கோரிக்கையை **கூடு** *709* இலிருந்து கழிக்கவும். வரவை கோருவதற்கு **கூடு** *710* இன் தொகையை **அட்டவணை** *9* **இன் கூடு** *908* இல் பதியவும். **கூடு** *711* இலுள்ள மீதித்தொகை அடுத்த ஏற்புடைய வருடங்களுக்கு முன் கொண்டு செல்லப்படும் நிறுத்திவைத்தல் வரியாக காணப்படும்.

***5.* அட்டவணை** *7B* **– நிறுத்திவைத்தல் வரி – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கத்தவறியவை**

i. நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட வேண்டிய ஆனால் நிறுத்திவைத்தல் முகவரினால் **கழிக்கப்படாத** நிறுத்திவைத்தல் வரியின் விபரங்களை **அட்டவணை** *7 B* **இன்** *712* **முதல்** *717* **வரையிலான நிரல்களின்** கீழுள்ள வரிகளில் பதியவும்.

ii. **கூடு** *717* **– நிறுத்திவைக்கப்பட்டவரினால் செலுத்தப்பட்ட மொத்த நிறுத்திவைத்தல் வரி** இன் மொத்தத்தை **கூடு** *718* இல் பதியவும். *2023/2024* ஆம் வரி மதிப்பீட்டாண்டிலிருந்து **முற்பண பெறுகையின்**

மீதான முன் கொண்டு வரப்பட்ட நிறுத்திவைத்தல் வரியினை கூடு *719* இல் பதியவும்.

iii **கூடு** *718* **மற்றும் கூடு** *719* இன் மொத்தத்தை **கூடு** *720* இல் பதியவும்.

2024/2025 ஆம் வரி மதிப்பீட்டாண்டின் மொத்த நிறுத்திவைத்தல் வரியை கோருவதற்கு தெரிவு செய்திருப்பின்;

கூடு *720* இலுள்ள தொகையை **கூடு** *721* இல் பதியவும். வரவை கோருவதற்கு **கூடு** *721* இலுள்ள தொகையை **அட்டவணை 9C இன் 933 ஆம் கூட்டில்** பதியவும். **கூடு** *722* இன் தொகை பூச்சியமாக காணப்படும்; அல்லது

எதிர்வரும் வரி மதிப்பீட்டாண்டுகளில் முற்பண பெறுகை மீதான நிறுத்திவைத்தல் வரியை முன் கொண்டுசெல்வதற்கு தெரிவு செய்திருப்பின்

இந்த வரி மதிப்பீட்டாண்டின் போது நிறுத்திவைத்திருப்பவரினால் செலுத்தப்பட்ட மொத்த நிறுத்திவைத்தல் வரியினை **கூடு** *718* இல் பதியவும். *2023/2024* ஆம் வரி மதிப்பீட்டாண்டின் போது முற்பண பெறுகை மீது நிறுத்திவைக்கப்பட்டவரினால் செலுத்தப்பட் முன் கொண்டுவரப்பட்ட நிறுத்திவைத்தல் வரியானது **கூடு** *719* இல் பதியப்படுதல் வேண்டும்.

2024/2025 ஆம் வரி மதிப்பீட்டாண்டிற்குரிய கோரப்பட்ட ஏற்புடைய நிறுத்திவைத்தல் வரியினை **(கூடு** *721***) கூடு** *720* இலிருந்து கழிக்கவும். வரவை கோருவதற்கு **கூடு** *721* இலுள்ள தொகையை **அட்டவணை 9B இன் கூடு** *933* இல் பதியவும். **கூடு** *722* இலுள்ள மீதித் தொகை அடுத்த ஏற்புடைய வருடத்திற்கு முற்பண பெறுகை மீதான முன் கொண்டு செல்லப்படும் நிறுத்திவைத்தல் வரியாக காணப்படும்.

6 அட்டவணை *7 C* – பங்குடமையிலிருந்தான முற்பண வருமான வரி

i. பங்காளர்களுக்கு பங்குடமையிலிருந்து ஒதுக்கப்பட்ட முற்பண வருமான வரி ஆனது இந்த அட்டவணையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

ii. நீங்கள் பங்குடமையின் பங்காளராயின், **பங்குடமையிலிருந்து ஒதுக்கப்பட்ட முற்பண வருமான வரியின்** தொகையினை **கூடு** *723* இல் பதியவும். *2023/2024* ஆம் வரி மதிப்பீட்டாண்டிலிருந்து **முன் கொண்டு வரப்பட்ட முற்பண வருமான வரியினை கூடு** *724* இல் பதியவும். **கூடு** *723* **மற்றும் கூடு** *724* இன் கூட்டுத் தொகையை **கூடு** *725* இல் பதியவும்.

2024/2025 ஆம் வரி மதிப்பீட்டாண்டின் மொத்த முற்பண வருமான வரியினை கோர தெரிவு செய்திருப்பின்;

- **கூடு** *725* இன் தொகையை **கூடு** *726* இல் பதியவும். வரவை கோருவதற்கு **கூடு** *726* இலுள்ள தொகையை **அட்டவணை** *9* **இன் கூடு** *907* இல் பதியவும். அவ்வாறாயின் **கூடு** *727* இல் எந்த தொகையும் காணப்படமாட்டாது. அல்லது

எதிர்வரும் வரி மதிப்பீட்டாண்டுகளில் கழிப்பதற்கு முற்பண பெறுகை மீதான முற்பண வருமான வரியை முன் கொண்டு செல்வதற்கு தெரிவு செய்திருப்பின்;

- ***2024/2025* ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு கோரப்பட்ட முற்பண வருமான வரியினை** *(726* கூடு)**கூடு** *725*இன் தொகையிலிருந்து கழிக்கவும் வரவை கோருவதற்கு .**கூடு** *726* இலுள்ள தொகையை **அட்டவணை** *907* **இன்** *9* **ஆம் கூட்டிற்கு** கொண்டு செல்லவும் .**கூடு** *727* இலுள்ள தொகையே அடுத்த ஏற்புடைய ஆண்டிற்கு **முற்பண பெறுகை மீது முன் கொண்டு செல்லப்படும் முற்பண வருமான வரியாக** காணப்படும் .

அட்டவணை *8* – வரி கணிப்பீடு

1. இந்த அட்டவணை முக்கியமான ***A, B, C, D, E, F*** மற்றும் ***G***ஆகிய ஏழு பகுதிகளை கொண்டுள்ளது.

a) **வரியிடற்பாலதான வருமானம்**

வருமான விபரத்திரட்டின் கூடு *120* – **வரியிடற்பாலதான வருமானத்தினை பகுதி** *A* இன் **கூடு** *801* இல் பதியவும்.

b) **முடிவுறுத்தல் நன்மைகள் மீதான வருமான வரியின் கணிப்பீடு**

i. முடிவுறுத்தல் நன்மைகளானது சலுகை வீதத்தில் அல்லது சாதாரண அதிகரித்து செல்லும் வீதத்தில் வரியிடப்படும்.

- சலுகை வீத வரிக்கு பொறுப்புடைய முடிவுறுத்தல் நன்மைகளின் அட்டவணை ஒன்று இந்த வழிகாட்டியின் இறுதியில் **பின்னிணைப்பு** *5* இல் தரப்பட்டுள்ளது.

- முடிவுறுத்தல் நன்மைகளுக்கு பிரயோகிக்கத்தக்க சலுகை வீதங்கள் இந்த வழிகாட்டியின் இறுதியில் **பின்னிணைப்பு** *6* இல் தரப்பட்டுள்ளது.
- அதிகரித்துச் செல்லும் வரி வீதம் **பின்னிணைப்பு** *7* இல் தரப்பட்டுள்ளது.

ii **அட்டவணை** *1* **இன் பகுதி** *1* **இன்** *110* **வது கூட்டினை இந்த அட்டவணையின் வருமான நிரல்** *.1* **இன்** *802*ம் **வரிசையில்** பதியவும்.

iii **சலுகை வரி வீதத்தில் வரிக்கு பொறுப்புடைய** முடிவுறுத்தல் நன்மையை **நிரல்** *.1* – **வருமானத்தின்** பொருத்தப்பாடுடைய வரிகளில் *(***வரி** *803.a,* **வரி** *803.b* **மற்றும் வரி** *803.c)* இல் பதிவதுடன் அந்த வரிக்கு பொறுப்பான முடிவுறுத்தல் நன்மையுடன் தொடர்புடைய வரி வீதத்தை **நிரல்** *.2* – **வீதத்தில்** பதியவும்..

iv *சாதாரண வீதத்தில் வரிக்கு பொறுப்பான முடிவுறுத்தல் நன்மையின் பகுதியை,* ***நிரல்*** *.1* – **வருமானத்தின்** *804* **ஆம் வரியின் கீழ்** பதியவும்.

v *பின்னர் இந்த வழிகாட்டியின் இறுதியிலுள்ள* **பின்னிணைப்புக்கள்** *6* **அல்லது** *7* *இன் பிரகாரம் ஏற்புடைய சலுகை வரி வீதம் அல்லது சாதாரண அதிகரித்துச் செல்லும் வரி வீதத்தை பிரயோகித்து வரியினை கணிக்கவும்.*

vi *803 a, 803 b, 803 c மற்றும் 804 ஆம் கூடுகளுக்கு பொருத்தமான வருமானம் தொடர்பிலான அத்தகைய வரித் தொகையை முறையே நிரல் .3 இன் கூடுகள் 803a.3, 803b.3, 803c.3 மற்றும் 804.3இல் பதியவும்.*

vii *இறுதியாக கூடுகள்* ***803a.3, 803b.3, 803c.3 மற்றும் 804.3*** *இன் கூட்டுத் தொகையை* **கூடு** *805* *இல் பதியவும்.* **கூடு** *805* *இலுள்ள தொகையை* **வருமான விபரத்திரட்டின் கூடு** *130* *இற்கு கொண்டு செல்லவும்.*

c) முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகை மீதான ஈட்டுகை வரி

i. முதலீட்டுச் சொத்தின் தேறிப் பெறுகை மீதான ஈட்டுகை *(*முதலீட்டுச் சொத்தின் விற்பனையில் முதலீட்டு ஈட்டுகை*)* ***10%*** இல் வரியிடப்படும்.

ii. பங்குடமை தவிர்ந்த முதலீட்டுச் சொத்துக்களின் விற்பனையில் மூலதன ஈட்டுகையை **நிரல்** *.1* – **வருமானத்தின் கூடு** *806* இல் பதியவும்.

iii. **நிரல் *.3* - வரியின்** *806* ஆம் வரிசையில் அதனுடன் தொடர்புடைய வரியினை பதியவும்.

d) **பங்குடமையிலிருந்தான முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகை மீதான ஈட்டுகையில் வரி**

i. பங்குடமையிலிருந்தான முதலீட்டுச் சொத்தின் விற்பனையிலிருந்தான மூலதன ஈட்டுகைகள் *10%* இல் வரியிடப்படும்

ii. பங்குடமையிலிருந்தான முதலீட்டுச் சொத்துக்களின் விற்பனையில் மூலதன ஈட்டுகையை **நிரல் *.1*** – **வருமானத்தின் கூடு** *807* இலும் ஏற்புடைய வரிகளை அதே வரசைகளில் **நிரல் *.3*** – **வரியின்** கீழ் பதியவும்.

iii. **கூடு** *806.3* **மற்றும் கூடு** *807.3* இன் மொத்தத்தை **வருமான விபரத்திரட்டின் கூடு** *140* இல் பதியவும்.

e) **மீதி வரியிடற்பாலதான வருமானம் மீதானவரி**

- **பந்தயம் மற்றும் சூதாட்டம், மதுபானம் அல்லது புகையிலை உற்பத்தி பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை அல்லது இறக்குமதி மற்றும் விற்பனையிலிருந்தான வரியிடற்பாலதான வருமானத்தின் மீது வரி**
  - பிரயோகிக்கத்தக்க வரி வீதம் *40%*. ஆகும்.
  - வரியிடற்பாலதான வருமானத்தை *808.1* **ஆம் கூட்டிலும்** அத்தகைய வருமானத்தின் மீதான வரியினை *808.3* **ஆம் கூட்டிலும்** பதியவும்.

- **அதிகரித்துச் செல்லும் வரி வீதங்களில் வரியிடுவதற்கான மீதி வரியிடற்பாலதான வருமானத்தின் மீதான வரி**
  - **அதிகரித்துச்செல்லும் வருமான வரி வீதம்** பிரயோகிக்கத்தக்கது.
  - *வரியிடற்பாலதான வருமானத்தினை* **கூடு *809 A .1.***இல் பதியவும்

- இந்த வழிகாட்டியின் இறுதியில் பின்னிணைப்பு *7* இல் தரப்பட்டுள்ள அதிகரித்துச் செல்லும் வருமான வரி வீதத்தை பிரயோகிக்கவும்.
- அத்தகைய வரியினை முறையே **கூடு** ***809A.3*** மற்றும் **கூடு** ***809B.3*** இல் பதியவும்.
- **கூடு** ***808.3***, கூடு ***809A.3***, மற்றும் **கூடு** ***809B.3*** மற்றும் **கூடு** ***809***c.3 இன் கூட்டுத் தொகையை **கூடு** ***810*** இல் பதியவும்.
- இறுதியாக **கூடு** ***810*** **இலுள்ள தொகையை வருமான விபரத்திரட்டின் கூடு** *150* இற்கு கொண்டு செல்லவும்.

f) இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவு மீதான வரி

- அட்டவணை *6* இன் கூடு *614* இன் தொகையை கூடு *811* இல் பதியவும்.
- இறுதியாக கூடு *811* இலுள்ள தொகையை வருமான விபரத்திரட்டின் கூடு *160* இற்கு கொண்டு செல்லவும்.

அட்டவணை 9 – வரி வரவுகள்

அட்டவணை 9 *இன் ஏற்புடைய கூடுகளில் கிடைக்கத்தக்க வரி வரவுகளை பதியவும்.*

a) வெளிநாட்டு வரி வரவு) கூடு (901

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் *80* ஆம் பிரிவின் கீழான ஏதேனும் வெளிநாட்டு வரி வரவுக்கு நீங்கள் உரித்துடையவராயின் அத்தகைய தொகையை **அட்டவணை *9* இன் கூடு *901*** இல் பதியவும். வெளிநாட்டு வரி வரவானது அத்தகைய வருமானத்தில் இலங்கையில் அறவிடத்தக்க வரித் தொகையை விஞ்சுதல் ஆகாது.

b) 60% சுய மதிப்பீட்டு வரியின் மீள்கொடுப்பனவு கோரிக்கை (கூடு 902A)

2023.04.01 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் வரிசெலுத்துநர்கள் வரி கணக்காய்வின் முன்னர் வரிசெலுத்துநர்களினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரிக்கு எதிராக மீளளிக்கத்தக்க

தொகையின் *60%* இனை கழித்தல் வேண்டும். அத்தகைய மீளளிக்கத்தக்க கோரிக்கைத் தொகையினை *902A* ஆம் கூட்டில் பதியவும்.

c)* ஊழிய வருமானத்தின் மீது செலுத்தப்பட்ட முற்பண தனியாள் வருமான வரி – முதன்மை ஊழியம் *(கூடு 903)

முதன்மை ஊழியத்திலிருந்து ஊழிய வருமானத்தைக் கொண்டுள்ள தனியாட்கள் முதன்மை தொழில்தருநரினால் கழிக்கப்பட்ட முற்பண தனியாள் வருமான வரி மீது வரி வரவை கோருவதற்கு உரித்துடையவராவர்.

ஊதியத்தின் மீது முதன்மை தொழில்தருநரினால் மேற்கொள்ளப்பட்ட முற்பண தனியாள் வருமான வரிக் கழிப்பனவை **கூடுகள்** ***903A, 903B, 903C*** என்பவற்றில் பதியவும். உங்கள் முதன்மை ஊழியரினால் வழங்கப்பட்ட முற்பண தனியாள் வருமான வரி *T-10* சான்றிதழ்களை இணைக்கவும்.

d)* ஊழிய வருமானத்தின் மீது செலுத்தப்பட்ட முற்பண தனியாள் வருமான வரி – இரண்டாம் ஊழியம் *(கூடு 904)

ஒரு ஊழியத்திற்கு மேற்பட்ட ஊழியத்தை உடைய தனியாட்களுக்கு, முதன்மை ஊழியம் தவிர்ந்த ஏனைய ஊழியம் இரண்டாம் ஊழியமாக கருதப்படும். ஒவ்வொரு இரண்டாம் தொழில்தருநரினாலும் ஊதியத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட முற்பண தனியாள் வருமான வரிக் கழிப்பனவுகளை தனித்தனியாக பதியவும். முற்பண தனியாள் வருமான வரி/ *T-10 (புதிய)* இனை இணைக்கவும்.

e)* முடிவுறுத்தல் நன்மைகளுக்கு செலுத்தப்பட்ட வரி *(கூடு 905)

கழிக்கப்பட்டு செலுத்தப்பட்ட வரியானது வரவாக கோரப்படலாம். அத்தகைய தொகையினை கூடு *905* இல் பதியவும்.

f)* பங்குடமை வரியின் பங்காளரின் பங்கு *(கூடு 906)

இந்த கூட்டினை நிரப்புவதற்கு முன்னர் **அட்டவணை** ***9B*** இனை நிரப்புதல் வேண்டும்.

- *2020.01.01* முதல் செயல் வலுப்பெறும் விதத்தில் பங்குடமையின் வரியிடற்பாலதான வருமானத்தில் வருமான வரியை செலுத்த பங்குடமை பொறுப்புடையதாகின்றது.

- *2023/2024* ஆம் வரிமதிப்பீட்டாண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட பங்குடமை வரியின் மீதமுள்ள பங்கினை *922* **ஆம் கூட்டில்** பதியவும்

- *2024/2025* ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு செலுத்தப்பட்ட பங்குடமை வரியின் பங்காளரின் பங்கினை *923* **ஆம் கூட்டில்** பதியவும்.

- பங்குடமை வரியின் பங்காளரின் மொத்த பங்கினை ***(கூடு** 922* மற்றும் **கூடு** *923* இன் மொத்தம்*)* *924* **ஆம் கூட்டில்** பதியவும். அத்துடன் *2024/2025* ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு கழிக்கப்படற்பாலதான தொகையினை *925* **ஆம் கூட்டில்** பதியவும்.

g)* பங்குடமையிலிருந்தான முற்பண வருமான வரி மு.வ.வ. *(கூடு 907)

அட்டவணை *7C* **இன் கூடு** *726* **கூட்டி**லுள்ள தொகையை **கூடு** *907* இல் பதியவும் *(நம்பிக்கை நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தொகையும் பதியப்படலாம்)*

***h)*முற்பண வருமான வரி வரவு – நிறுத்திவைத்தல் முகவரினால் கழிக்கப்பட்ட மு.வ *(908 கூடு)* வ.**

அட்டவணை *7 A* **இன் கூடு** *710* இலுள்ள தொகையை **கூடு** *908* **இற்கு** கொண்டு செல்லவும்.

i) முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகை மீதான ஈட்டத்தில் செலுத்தப்பட்ட வரி (கூடு 909)

செலுத்தப்பட்ட தொகையை **கூடு** *909* இல் பதியவும்.

j) பங்குடமையிலிருந்தான முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகை மீதான ஈட்டத்தில் செலுத்தப்பட்ட வரி (கூடு 910)

பங்குடமையினால் ஒதுக்கப்பட்ட தொகைகளை **கூடு** *910* இல் பதியவும்.

k) நிறுத்திவைக்கப்பட்டிருப்பவரினால் செலுத்தப்பட்ட தவணை கொடுப்பனவுகள் மற்றும் முற்பண வருமான வரி/நிறுத்திவைத்தல் வரி (கூடு 911)

இந்த கூட்டை நிரப்புவதற்கு முன்னர் **அட்டவணை** *9B* நிரப்பப்படுதல் வேண்டும்.

i. தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் இறுதி கொடுப்பனவு என்பவற்றை தரப்பட்ட வரிகளில் பதியவும் .

ii. தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் இறுதி கொடுப்பனவு என்பவற்றின் கூட்டுத் தொகையினை **கூடு** *932* இல் பதியவும்.

iii. **அட்டவணை** *6B* **இன் கூடு** *614* இன் பிரகாரமும் **அட்டவணை** *7 B* இன் **கூடு** *721* இன் பிரகாரமும் மேற்கொள்ளப்பட்ட முற்பண வருமான வரி/ நிறுத்திவைத்தல் வரியின் கொடுப்பனவுகளின் தொகைகளை **கூடு** *933* இல் பதியவும்.

iv. கூடுகள் *932* மற்றும் *933* இன் கூட்டுத் தொகையை கூடு *934* இல் பதியவும்.

v. *934* ஆம் கூட்டிலுள்ள தொகையை அட்டவணை *9* இன் கூடு *911* இல் பதியவும்.

l) ***கூடு – 901 கூடு 911*** *வரையிலான கூட்டுத் தொகையினை* ***கூடு 912*** *இல் பதியவும் .இறுதியாக* ***கூடு 912*** *இல் உள்ள தொகையை* ***வருமான விபரத்திரட்டின் கூடு 180*** *இற்கு கொண்டு செல்லவும் .*

அட்டவணை *10* – நட்ட சீராக்கல்

i. இந்த வரிமதிப்பீட்டாண்டில் உறப்பட்ட நட்டங்கள் அல்லது முன் கொண்டு வரப்பட்ட நட்டங்கள் இந்த அட்டவணையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் .

ii. நட்டம் இலாபமாக இருந்திருப்பின் *%40* அல்லது அதிகரித்துச் செல்லும் வீதத்தில் வரியிட்டிருக்க கூடிய வியாபார நட்டங்களை வெளிப்படுத்துவதற்காக பகுதி *1A & 1B* என்பவை முறையே தரப்பட்டுள்ளன .

iii. *2018/2019, 2019/2020, 2020/2021, 2021/2022, 2023/2024* மற்றும் *2024/2025* ஆம் வரி மதிப்பீட்டாண்டுகளிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட நட்டங்கள் நிரல் *0.2*இன் அதற்கு ஏற்புடைய வரியிலும் மற்றும்

நடப்பு வருடத்தின் நட்டங்கள் அதற்கு அடுத்த வரியிலும் பதியவும் .

iv. நட்டத்திற்கு எதிரீடு செய்ய கருதியுள்ள நடப்பு வரி மதிப்பீட்டாண்டு இலாபத்தினை **நிரல்கள் *0.3*இலிருந்து *0.7*வரையில்** பதியவும் .

v. ஆளொருவருக்கு உரிமையுள்ள ஆதனம் ஒன்று வெவ்வேறு வரி வீதங்களில் வரியிடற்பாலதான வியாபாரத்திலிருந்தான வெவ்வேறு ஈட்டங்கள் மற்றும் இலாபங்களை)நட்டங்கள் அடங்கலாக (உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்பட்டிருப்பின் ,அவ் ஆதனத்திற்கான செலவினம் மற்றும் பெறப்பட்ட சலுகையானது ,அத்தகைய ஈட்டங்கள் மற்றும் இலாபங்களை ஈட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட அந்த ஆதனத்தின் பகுதிகளின் சந்தைப் பெறுமானத்திற்கு அமைவாக அத்தகைய ஈட்டங்கள் மற்றும் இலாபங்களிடையே பகிரப்படுதல் வேண்டும் .

C. சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் கூற்றினை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

*A** இலங்கையில் உள்ள அனைத்து அசையாச் சொத்துக்களையும் குறிப்பிடவும்.

*B** இலங்கைக்கு வியே உள்ள அனைத்து அசையாச் சொத்துக்களையும் குறிப்பிடுக.

*A*1* 2024.03.31 இல் உங்களுக்கு சொந்தமான வதிவிடம் பற்றிய விபரம்.

2017 ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் *126 (2)* ஆம் பிரிவிற்கமைய ஆணையாளர் நாயகம் விபரத்திரட்டுடன் கோப்பிடுவதற்கு ஏதேனும் தகவல்கள் இருப்பின், அதனை விபரத்திரட்டு மற்றும் இணைப்புகளுடன் வழங்க குறிப்பிடுவார்.

அதற்கமைவாக, உங்களுக்கு விபரத்திரட்டுடன் வழங்கப்பட்டுள்ள **சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் கூற்று** படிவத்தில் *2025* மார்ச் *31* ஆம் வரிமதிப்பீட்டாண்டின் இறுதி திகதியன்று *(*உங்களது*)* ஒவ்வொரு சொத்தினதும் பொறுப்பினதும் *(*இலங்கையின் உள்ளும் வெளியேயும்*)*

பெறுமதியை வழங்கி விபரத்திரட்டுடன் சமர்ப்பிக்க தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

(கொள்முதல் விலையினை அல்லது அது கொள்முதல் இல்லை எனில் சந்தை பெறுமதியை வெளிப்படுத்தவும்.)

பகுதி *01*

***A.* அசையா சொத்துக்கள்:**

2025.03.31 அன்று *(இலங்கைக்கு உள்ளும் வெளியேயும் அமைந்துள்ள)* உங்களது அனைத்து அசையாச் சொத்துக்களையும் பெறுமதிகளுடன் வெளிப்படுத்தவும்.

***B.* அசையும் சொத்துக்கள்:**

2025.03.31 அன்று உங்களுக்கு உரிமையான *(இலங்கையினுள்ளும் வெளியேயும் உள்ள)* மோட்டார் வாகனங்கள், வங்கி வைப்புக்கள், மற்றும் பங்குகள்/இருப்புக்கள்/பிணையங்கள், கையிலுள்ள பணம், வழங்கப்பட்ட கடன் அல்லது வருமதியிலுள்ள தொகைகள், தங்கம், வெள்ளி, இரத்தினகற்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற அனைத்து அசையும் சொத்துக்களையும் அதன் பெறுமதியுடன் வெளிப்படுத்தவும்.

***C.* வியாபாரத்தின் பகுதியாக வைத்திருக்கப்படும் சொத்து**

வியாபாரத்தின் பகுதியாக வைத்திருக்கும் சொத்தின் பெறுமதி, அதாவது *2025.03.31* அன்று மூலதன மற்றும் நடப்பு கணக்கின் மிகுதி வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். *(ஏற்புடையதாயின் ஐந்தொகையின் பிரதிகளை இணைக்கவும்)*

***D.* *2025.03.31* அன்றுள்ளவாறான பொறுப்புக்கள்**

இந்த வருட காலப் பகுதியில் ஆளொருவருக்கு அல்லது நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டிய கடன் அடங்கலாக, அனைத்து பொறுப்புக்களும் இந்த பகுதியில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

பகுதி *02*

A. **இந்த வருடத்தின் போது கொள்முதல் செய்யப்பட்ட அல்லது நன்கொடையாக பெறப்பட்ட வேறு ஏதேனும் சொத்துக்கள்**

கொள்முதல் செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் நன்கொடையாக பெறப்பட்டவை அடங்கலாக சொத்துக்களின் மொத்த பெறுமதியை வெளிப்படுத்தவும்.

B. **இந்த வருடத்தின் போது பங்குகள் அடங்கலாக சொத்துக்களின் கையுதிர்வு *(விற்பனை/மாற்றீடு/நன்கொடை)***

2024.04.01 முதல் *2025.03.31* வரையிலான காலப் பகுதியில் கையுதிரப்பட்ட சொத்துக்களின் மொத்த பெறுமதியை வெளிப்படுத்தவும். *(*விற்பனைகள், பரிமாற்றங்கள், நன்கொடைகள்*)*

இணைப்புக்கள்

அட்டவணை *1* – பெறத்தக்க நிவாரணங்களின் நிரல்

உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின் *2* ஆம் பந்தியின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிவாரணங்கள்

a) **தனிப்பட்ட நிவாரணம்** – உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின் *2* ஆம் பந்தியின் *(அ)* உப பந்தியின் கீழ் வழங்கப்பட்ட நிவாரணம். – வரிமதிப்பீட்டாண்டிற்கு ரூபா. *1,200,000* ஏப்பிரல் *1* ஆரம்பிக்கும் வரிமதிப்பீட்டாண்டின் மொத்த வரிமதிப்பிடற்பாலதான வருமானம் வரையில் *(*முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகள் தவிர்த்து*)*

b) **வாடகை நிவாரணம் -** உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின் *2* ஆம் பந்தியின் *(இ)* உப பந்தியின் கீழ் வழங்கப்பட்ட நிவாரணம் – வரிமதிப்பீட்டாண்டின் மொத்த வாடகை வருமானத்தின் *25%*

c) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையின் *2* ஆம் பந்தியின் *(எ)* ஆம் உபபந்தியில் வழங்கப்பட்டுள்ள நிவாரணம் – தனது வளவில் பொருத்துவதற்கு சூரிய கலங்களை கொள்வனவு செய்து தேசிய மின் கட்டமைப்புக்கு இணைத்துள்ள வதிவுள்ள ஆளொருவருக்கு, அத்தகைய சூரிய கலங்களின் மொத்த செலவினங்கள் வரையில் அல்லது அத்தகைய சூரிய கலங்களின் கொள்வனவிற்கு பெறப்பட்ட கடன் தொடர்பில் வங்கிக்கு செலுத்திய தொகைகள் வரையில் ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டிற்கும் ரூபா *600,000.*

குறிப்பு: உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு ஓர் வரி மதிப்பீட்டாண்டிற்கு இலங்கையில் வதிவுள்ள தனியாளொருவரின் வரியிடற்பாலதான வருமானத்தை அடைவதற்கு மேற்குறிப்பிட்ட நிவாரணங்களின் கூட்டுத்தொகை கழிக்கப்படற்பாலதானதாகும். எவ்வாறாயினும், வதிவற்ற தனியாள் ஆனால் இலங்கையின் பிரசை ஒருவர், தனது வரியிடற்பாலதான வருமானத்தை அடைவதற்கு மேலே *a)* பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட நிவாரணத்தைக் கழிக்கலாம்

இணைப்பு *2* – விலக்களிக்கப்பட்ட தொகைகளின் பட்டியல் *(தனியாள் ஒருவருக்கு ஏற்புடையது)*

1. ***2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் இற்றுவரை உள்ள விலக்களிப்புகள்**

a) பின்வருவன தொடர்பில் ஆளொருவருக்கு நட்டஈடாக அல்லது பணிக்கொடையாக கொடுப்பனவு செய்யப்பட்ட மூலதன பணத் தொகைகள் -

அ) ஆளொருவரினால் உறப்பட்ட தனிப்பட்ட ஊறுகள்; அல்லது

ஆ) இன்னொரு ஆளொருவரது மரணம்;

b) ஓய்வூதிய வருமானமானது இலங்கை அரசாங்கம் அல்லது இலங்கை அரசாங்கத்தின் திணைக்களம் ஒன்றினால் செலுத்தப்படுமிடத்து ஆளொருவரின் ஓய்வூதியம்;

c) ஊழியர் ஒருவர் ஓய்வு பெறும் போது பின்வருவனவற்றிலிருந்து செலுத்தப்பட்ட தொகை —

i) ஏதேனும் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அல்லது *1980* ஆம் ஆண்டின் *46* ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தைக் குறிக்கின்றதான, *1987*, ஏப்பிரல் *1* ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கு அதனால் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து செலுத்தப்பட்ட தொகை;

ii) ஆணையாளர் நாயகத்தினல் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சகாய நிதியம்;

d) பின்வருவனவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுவரை, சிறப்புரிமைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தனியாள் ஒருவரின் வருமானம் -

i) இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டம் அல்லது அதனை ஒத்த சட்டம்;

ii) ஐக்கிய நாடுகளின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளின் மேலான சமவாயம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகவர் நிலையங்களின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளின் மேலான சமவாயத்திற்கு பயன் கொடுக்கும் சட்டம்; அல்லது

iii) சர்வதேச ஒழுங்கமைப்பொன்று தொடர்பாக இச் சட்டத்தின் கீழ் அல்லது உட்பந்தி *(i)* அல்லது *(ii)* இல் குறிப்பீடு செய்யப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

e) கீழ்வருவன தவிர்த்து - *50,000* ரூபாவை விஞ்சாத முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப் பெறுகையிலிருந்து வதிவுள்ள தனியாள்

ஒருவரினால் செய்யப்பட்ட ஈட்டுகையும் வரிமதிப்பீட்டாண்டில் முதலீட்டுச் சொத்துக்களிலிருந்தான தேறிப்பெறுகையிலிருந்து வதிவுள்ள தனியாளினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகைகள் *600,000* ரூபாவை விஞ்சாத விடத்தும்,

i. இப் பந்தியின் அனுகூலத்தை எடுத்துக் கொள்ளும் நோக்கத்துக்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாகங்களில் முதலீட்டுச் சொத்தொன்று தேறிப்பெறப்பட்டுள்ளது என ஆணையாளர் நாயகம் திருப்திப்படுகின்றவிடத்து, தேறிப் பெறுகையிலிருந்தான மொத்த ஈட்டுகை *50,000* ரூபாவை விஞ்சாததும், வரி மதிப்பீட்டாண்ண்டில் முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப் பெறுகையிலிருந்தான வதிவிட தனியாளினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகைகள் *600,000* ரூபாவை விஞ்சாததுமாக இருந்தால் மட்டும் இப்பந்தியின் கீழ் விலக்களிக்கப்டுதல் வேண்டும;

ii) கூட்டாகச் சொந்தமாகக் கொண்ட முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகை விடயத்தில், இப்பந்தியானது, சொத்தின் தேறிப் பெறுகையின் மேல் முதலீட்டுச் சொத்தின் எல்லாச் சொந்தக் காரர்களினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகை *50,000* ரூபாவை விஞ்சாததும் வரிமதிப்பீட்டாண்டில் வதிவிட தனியாளினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகைகள் *600,000* ரூபாவை விஞ்சாததுமாக இருந்தால் மட்டும் ஏற்படையதாகும்;

f) தனியாள் ஒருவரின் பிரதான வதிவிடத்தின் தேறிப்பெறுகையின் மேல் வதிவிட தனியாளினால் செய்யப்பட்ட ஈட்டுகை, ஆயின் தேறிப்பெறுவதற்கு முன்னர் தொடர்ச்சியாக மூன்றாண்டுகளுக்கு அவ்வாளினால் சொந்தமாகக் கொள்ளப்பட்டு அம் மூன்றாண்டுகளில் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு அவ்வாள் அதில் வசித்திருத்தல் வேண்டும். *(நாளாந்த அடிப்படையொன்றில் கணக்கிடப்பட்டது.);*

g) பிணையங்கள் மற்றும் இலங்கை பரிவர்த்தனை ஆணைக் குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்கு பரிவர்த்தனை நிலையத்தினால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலக முறையான நிரலில் பட்டியலிடப்பட்ட பங்குகளைக் கொண்டுள்ள சொத்தொன்றின் தேறிப் பெறுகையின் மேல் செய்யப்பட்ட ஈட்டுகை;

h) ஆளொருவரினால் உருவாக்கப்பட்ட புத்தாக்கம் அல்லது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியை அங்கீகரித்து இலங்கை குடியரசின் சனாதிபதியினால் அல்லது அரசினால் அளிக்கப்பட்ட விருதாக அவ்வாளினால் பெறப்பட்ட ஏதேனும் பரிசு;

i) *1978* ஆம் ஆண்டின் *7* ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திலிருந்து அல்லது *1985* ஆம் ஆண்டின் *9* ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியத்திலிருந்து ஆளொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் பணத் தொகை;

j) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்ட

(a) எவரேனும் வதிவற்ற ஆளொருவரினால் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தில் ஏதேனும் இறையாண்மை முறியின் மீது வட்டி, கழிப்பனவு அல்லது ஏதேனும் தேறிப்பெறுகை மீதான ஈட்டுகை *(*இலங்கையின் நிரந்தர தாபனம் தவிர்ந்த*).*

(b) எவரேனும் ஆளொருவரினால் இலங்கை அபிவிருத்தி முறிகள் அடங்கலாக, வெளிநாட்டு நாணயத்தில் உள்ள ஏதேனும் இறையாண்மை முறியின் மீது வட்டி அல்லது கொடுப்பனவு செய்யப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட கழிப்பனவு மூலம்
பெறப்பட்ட ஏதாவது வருமானம்

k) வங்கியொன்றிலிருந்து அல்லது *2000* ஆம் ஆண்டின் *43* ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ்

பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனியிலிருந்து ஆயுட்காலத்திற்கு பத்தாண்டுகளுக்கு குறையாத காலப்பகுதியொன்றிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுத் தொகை ஒன்றிலிருந்து சிரேஷ்ட பிரசையொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் தொகை

l) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் வழங்கப்பட்டவையும் 2021 *ஏப்பரல் 01 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் சர்வதேச தங்க முறிகளில் 100 மில்லியன் டொலர் இற்கு குறையாத கூட்டு மொத்த முதலீட்டை செய்த வர்த்தக வங்கி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் பெறப்பட்டதும் பெற்றுக் கொள்ளப்பட்டதுமான அல்லது அத்தகைய முறிகளில் தேறிப் பெறுகையிலிருந்தான ஈட்டுகை.*

(420 *ஆவ அத்தியாயம்) பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள்* கட்டளைச் சட்டத்தின் கீழான பிணையம் அல்லது திறைச்சேரி முறிகள் அல்லது 417 ஆவது அத்தியாயமான உள்நாட்டு திறைச்சேரி பிணை முறிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் திறைச்சேரி முறிகள் மூலம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் *தாபிக்கப்பட்டுள்ள* சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினால் 2021 ஏப்பிறல் 1 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் திரண்ட அல்லது பெறப்பட்ட வட்டி அல்லது கழிவு.

o) லொத்தர் ஒன்றிலிருந்தான வெல்லுகையின் மொத்த தொகை *500,000* ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ அந்த ஏதேனும் வெல்லுகை

p) இலங்கை அரசாங்கத்தின் ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட வீதி வாகன அனுமதிப்பத்திரத்திலிருந்து அவ் ஊழியரினால் பெறப்பட்ட அல்லது வழிவந்த நன்மைகள்.

q) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் *84* ஆம் பிரிவின் *(2)* ஆம் உட்பிரிவின் கீழ் *2.5%* வரி கழிக்கப்பட்ட அந்த இரத்தினக்கல் விற்பனையிலிருந்து ஆளொருவர் பெற்றுக் கொண்ட ஏதேனும் தொகை;

r) *விமானங்கள், மென்பொருள் அனுமதிப்பத்திரம் அல்லது ஏனைய ஏற்புடைய சேவைகளுக்காக ஏதேனும் கொடுப்பனவாக வரையறுக்கப்பட்ட இலங்கை விமானக் கம்பனியில் இருந்து வதிவற்ற*

நபரினால் 2018 ஏப்பரல் மாதம் 1 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஈட்டப்பட்ட நிதி;

s) நாட்டிற்கு கிடைக்கும் பொருளாதார நன்மைகள் தொடர்பாக கருத்திற் கொண்டு அச் செயற்திட்டம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுவதாயின் மற்றும் அச் செயற்திட்டத்திற்காக முழுமையாக வெளிநாட்டு வழங்கள்கள் மூலம் நிதி வழங்குவதாயின், இலங்கை அரசாங்கத்தில் செயற்திட்டத்தில் ஈடுபட்டுள்ள வதிவற்ற நபரினால் ஈட்டப்பட்ட நிதி அளவு;

t) இலங்கையிலுள்ள எவரேனும் ஆளொருவருக்கு அல்லது இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடனிற்கு இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளொருவருக்கு திரளுகின்ற அல்லது பெறப்படுகின்ற வட்டி

u) இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் ஏதேனும் வர்த்தக வங்கியில் அல்லது ஏதேனும் விசேட வங்கியில் எவரேனும் ஆளொருவரினால் அல்லது அவர் சார்பில் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணய கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அவரது வரவில் காணப்படும் பணத்திற்கு திரட்டப்படும் அல்லது பெறப்படும் வட்டி.

v) 2020 ஏப்பரல் 08 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் (பின்னர் புதுப்பிக்கப்பட்ட கணக்குகள் நீங்கலாக) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு பரிவர்த்தனைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறு இலங்கையிலுள்ள அதிகாரம் அளிக்கப்பட்ட வியாபாரியுடன் திறக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட "விசேட வைப்புக் கணக்கு" ஆகப் பெயரிடப்பட்ட வைப்புக் கணக்கு காலப்பகுதி ஒன்றிலிருந்து எவரேனும் ஆளினால் திரட்டப்பட்ட அல்லது பெறப்பட்ட வட்டி

w) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்யப்பட்ட உடன்படிக்கையில் உள்ளக்கப்பட்டுள்ள மற்றும்

2012 ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க நிதிச்கட்டத்தின் பகுதி *IV* இன் ஏற்பாடுகளுக்கு அமைய ஏதேனும் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கீழ்வரும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வதிவுள்ள கம்பனியால் *2022,* ஒக்டோபர் *01* இந்கு பின்னர் செலுத்தப்பட்ட பங்கிலாபம் –

(i) இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதியுடன் தொடர்புடைய துறைமுக நுழைவு வியாபாரம்

(ii) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இலங்கையினுள் அதனை கொண்டுவராது வேறு நாட்டிற்கு கப்பலேற்றப்படுகின்ற இடத்து கரைகடந்த வியாபாரம்

(iii) வெளிநாட்டு வாடிக்கையாளருக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்குதல்

(iv) நிதி விநியோக சங்கிலி மற்றும் பட்டியலிடல் செயற்பாடுகளின் முகாமைத்துவத்திற்கு முன்னிலை கொள்வனவாளர்களின் தலைமையக செயற்பாடுகள்

(v) இலங்கையில் இணைக்கப்பட்ட பிணைக்குதம் அல்லது பன்நாட்டு தொகுதி போன்ற ஒருங்கிணைக்கப்பட்ட சேவைகள்

84A ஆம் பிரிவின் *(1A)* ஆம் உப பிரிவின் கீழ் முற்பண வருமான வரிக்குட்படும் அந்த வதிவிட கம்பனி ஒன்றினால் அல்லது பிறிதொரு வதிவுள்ள கம்பனியினால் ஒக்டோபர் *01* அன்று அல்லது அதற்கு பின்னர் பெறப்பட்ட பங்கிலாபத்திலிருந்தான ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களிற்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான அல்லது அதிலிருந்து பெறப்பட்ட அளவு வரை உறுப்பினரொருவருக்கு அவ்வதிவிடக் கம்பனியின் கொடுப்பனவு.

x) வதிவற்ற கம்பனியொன்றின் கணிசமான அளவிலான பங்குபற்றுகை தொடர்பில் எவரேனும் ஆளொருவரின் பங்குகளை தேறிப் பெறப்படுவதிலிருந்தான பங்கிலாபங்களும் அவை தேறிப் பெறப்படுவதன் மீதிலான ஈட்டுகைகளும

*(*உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் *(r)* பந்தியின் வரைவிலக்கணத்திற்கேற்ப கணிசமான அளவிலான பங்குபற்றுகை*)*

y) எவரேனும் ஆளொருவருக்கு இலங்கைக்கு வெளியே பயன்படுத்தப்படுவதற்கு இலங்கையினுள்ளோ வெளியோ வழங்கப்பட்ட ஏதேனும் சேவைக்கு வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு பெறப்படுவதுடன் இலங்கைக்கு வங்கி ஒன்றினூடாக அனுப்பிவைத்தல்.

z) ஈட்டங்களும் இலாபங்களும் *[*உப விடயம் *(b)* இல் குறிப்பிடப்பட்டுள்ள ஈட்டுகை மற்றும் இலாபங்கள் தவிர்ந்த*]* வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டப்பட்டு அல்லது பெறப்பட்டு இலங்கைக்கு வங்கி ஒன்றினூடாக அனுப்பப்படும் ஏதேனும் வெளிநாட்டு மூலம்

aa) வதிவற்ற ஆளொருவரினால் ஆய்வுகூட சேவைகள் அல்லது நியம சான்றுபடுத்தல் சேவைகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் தொகை

2. *2018* ஆம் ஆண்டின் ஏப்பிரல் *1* ஆம் திகதிய *2064/53* ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலில் ஏற்பாடு செய்யபட்டவாறு, அந்த ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்கு *2006* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் *16*இ, *16*ஈ, *16*உ, *24*அ பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் ஆளொருவரின் இலாபங்களின் அல்லது வருமானத்தின் முழு அல்லது ஏதேனும் பகுதி, வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள போது, மற்றும் *2018* ஆம் ஆண்டின் மார்ச் *31* அன்று அந்த காலப்பகுதியின் ஏதேனும் காலாவதியாகாத பகுதி காணப்படின், அப் பகுதியானது அந்த ஏற்பாடு தொடந்தும் பிரயோகத்திலுள்ளவாறு தொடர்ந்தும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

3. *2018.09.17* ஆம் திகதிய *2089/1* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் -

(அ) 2018 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் *01* ஆம் திகதிக்கு முன்னர் *1978* ஆம் ஆண்டின் *04* ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்

17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருக்கும் ஏதேனும் தொழில்முயற்சியொன்று; மற்றும்

(ஆ)மேற்குறித்த ஒப்பந்தத்தின் மூலம், *1979* ஆம் ஆண்டின் *28* ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் அல்லது *2000* ஆம் ஆண்டின் *38* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் அல்லது *2006* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் என்பனவற்றின் கீழ், குறித்த தொழில் முயற்சியின் இலாபம் மற்றும் வருமானம் அல்லது அத்தொழில் முயற்சி மூலம் வழங்கப்படுகின்ற ஏதேனும் பங்கிலாபங்கள் முழுவதுமாகவோ அல்லது அதன் பகுதியளவாகவோ வருமான வரியிலிருந்து விலக்களிப்பதற்கு அல்லது குறைக்கப்பட்ட விகிதத்திற்கமைய வரி விதிப்பதற்கு, அல்லது வருமான வரிப் பொறுப்பினைக் கணிக்கும் ஏற்பாடுகளை வழங்குமெனில்,

அத்தகைய தொழில்முயற்சியின் இலாபங்கள் மற்றும் வருமானத்தினதும் முடிவுறாது எஞ்சியுள்ள பகுதிக்கு *2017* ஆம் ஆண்டின் *24* ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுவது அல்லது அத்தகைய உடன்படிக்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள விகிதம் அல்லது அடிப்படையினைக் கருத்திற்கொண்டு கணிக்கப்பட்ட வருமான வரிக்கு பொறுப்புடையது ஆதல் வேண்டும்.

இணைப்பு *3* – தகைமையளிக்கும் கொடுப்பனவுகளின் பட்டியல்

a) அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமொன்றுக்கு மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகள் – மொத்த வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின் நான்கிலொரு பங்கு *(*வரியிடற்பாலதான வருமானத்தின் மூன்றிலொரு பங்கு*)* அல்லது ரூபா *75,000* அல்லது நன்கொடைத் தொகை என்பவற்றுள் குறைவான தொகை.

b) அரசாங்கம் அல்லது உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஐந்தாம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுக்கு பணமாக

அல்லது வேறு ஏதேனும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகள்

c) *2006* ஆம் ஆண்டின் *10* ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைவாக முன்கொணரப்பட்ட ஏதேனும் தகைமையளிக்கும் கொடுப்பனவின் கழிக்கப்படாத ஏதேனும் மீதி.

d) *2021* ஏப்பிரல் *1* ஆம் திகதி செயல்வலுப்பெறும் வகையில், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் பரிந்துரைசெய்யப்பட்டதும் உறுதி செய்யப்பட்டதுமான சமுர்த்தி நன்மை பெறும் குடும்பதிலுள்ள பெண் ஒருவருக்கு பணமாக அல்லது கடை ஒன்றை தாபிப்பதற்கு வதிவுள்ள ஆளொருவரினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு

e)

i. ஐந்து மில்லியன் ரூபாய்களுக்கு குறையாத செலவில் திரைப்பட தயாரிப்பில் *(அத்தகைய* திரைப்படத்தின் விளம்பர செலவினங்கள் அடங்கலாக*)*

ii. இருபத்தைந்து மில்லியன் ரூபாக்களை விஞ்சாத செலவில் புதிய திரையரங்கு ஒன்றை நிருமாணித்தல் மற்றும் கருவிகளைப் பொருத்துதல்

iii. பத்து மில்லியன் ரூபாக்களை விஞ்சாத செலவில் திரையரங்கு ஒன்றினை மேம்படுத்துதல்

என்பவற்றுக்கு, எவரேனும் நபர் ஒருவரினால் *2021*, ஏப்பிரல் *1* ஆம் திகதி அன்று அல்லது அதற்கு பின்னர் உறப்பட்ட செலவினம்

இவ் உப பந்தியின் கீழான கழிப்பனவானது இவ் வரி மதிப்பீட்டாண்டிற்குரிய வரியிடற்பாலதான வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கிற்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் நடப்பு ஆண்டில் கழிக்கப்படாத ஏதேனும் மீதியானது, முன்கொண்டு செல்லப்படலாம் என்பதுடன் இதே மட்டுப்படுத்தல்களுக்கு உட்பட்டு அடுத்து வரும் ஆண்டுகளில் அம் மீதியானது கழிக்கப்படலாம்.

இணைப்பு *4* – இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள், இறுதியற்ற நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகள் மற்றும் ஏற்புடைய வரி வீதங்களின் அட்டவணை

	கொடுப்பனவு வகை	**நி.வை.வ வீதம்**
(a)	பந்தயம் மற்றும் சூதாட்டத்தைக் கொண்ட வியாபரத்தை நடாத்துவதில் பெறப்பட்ட தொகைகள் தவிர்ந்த லொத்தர், வெகுமதி பந்தயம் அல்லது சூதாட்டத்தின் வெற்றியாக செலுத்தப்பட்ட தொகைகள்	*14%* இறுதி
(b)	*வதிவற்ற ஆளொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட நி.வை.வ. க்கு உட்படும் (வட்டி தவிர்ந்த) கொடுப்பனவுகள் (இலங்கையிலுள்ள நிரந்தர தாபனம் ஒன்றினூடாக பெறப்பட்ட கொடுப்பனவு தவிர்ந்த)*	14% இறுதி
(c)	வதிவற்ற ஆளொருவருக்கு மேற்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்டதாக கருதப்படும் வட்டி அல்லது கழிப்பனவு	*5%* இறுதி
(d)	ஏலமொன்றின் விற்கப்பட்ட ஏதேனும் இரத்தினக்கல்லின் விற்பனை விலை	*2.5%*
(e)	கீழ்வருவன தொடர்பில் கொடுப்பனவு செய்பவரின் ஊழியரல்லாத வதிவுள்ள தனியாள் ஒருவருக்கு கலண்டர் மாதம் ஒன்றுக்கு ரூபா *100,000* இனை விஞ்சும் சேவைக் கட்டண கொடுப்பனவுக்கு *(அ)* கற்பித்தல், விரிவுரையாற்றல், பரீட்சித்தல், பரீட்சையொன்றைக் கண்காணித்தல் அல்லது மேற்பார்வையிடுதலுக்காக *(ஆ)* வதிவுள்ள காப்புறுதி, விற்பனைகள் அல்லது பிரசார முகவருக்கான தரகு அல்லது தரகுக் கூலியொன்றாக *(இ)* மருத்துவர், பொறியியலாளர், கணக்காளர், சட்டத்தரணி, மென்பொருள் அபிவிருத்தியாளர், ஆராய்ச்சியாளர், கல்வியாளர் அல்லது	முழுக் கொடுப்பனவில் *5%*

	ஒழுங்குவிதியின் பிரகாரம் விதித்துரைக்கப்பட்ட தனியாள் சேவை வழங்குநர் போன்ற தனிப்பட்ட சேவை வழங்குநராக அத்தகைய தனியாளினால் வழங்கப்பட்ட சேவைக்காக	
(f)	செலுத்தப்பட்ட கழிப்பனவின் வட்டி	*5%*
(g)	வதிவுள்ள ஆளொருவருக்கான வாடகை கொடுப்பனவு *(கூட்டுத் தொகை ஒரு கலண்டர் மாதத்திற்கு ரூபா 100,000 இனை விஞ்சுமாயின்)*	முழுக் கொடுப்பனவில் *10%*
(h)	விதிப்பனவு, இயற்கை வளக் கொடுப்பனவு அல்லது கட்டுப்பணம்	*14%*
(i)	அரசுரிமைப் பணம்	*14%*
(j)	பங்கிலாபம் *(2023, சனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்னர் வதிவுள்ள கம்பனியினால் வெளிப்படுத்தப்பட்ட பங்கிலாபமானது இறுதி நிறுத்திவைத்தல் வரியாக இருக்குமிடத்து)*	*15%*

இணைப்பு *5* – சலுகை ரீதியில் வரிக்கு பொறுப்புடைய முடிவுறுத்தல் நன்மைகளின் பட்டியல்

i. ஓய்வூதியம் ஒன்றை மாற்றியதில் பெறப்பட்டத் தொகை

ii. இளைப்பாற்றுப் பணிக்கொடையொன்றாக பெறப்பட்ட தொகை

iii. தொழில்தருநரினால் தொழிலுக்கு அமர்த்தப்பட்ட எல்லா தனியாட்களுக்கும் ஒரு சீராக ஏற்புடையதாகின்றது என ஆணையாளர் நாயகத்தினால் கருதப்படும் திட்டமொன்றின் கீழ் பதவி அல்லது ஊழியத்தின் இழப்புக்காக நட்ட ஈடாக பெறப்பட்ட தொகை.

iv. *1980* ஆம் ஆண்டின் *46* ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கை நிதியத்திலிருந்து ஊழியத்திலிருந்து இளைப்பாறும் நேரத்தில்

அல்லது அதன் பின்னரான நேரத்தில் ஆளொருவருக்கு செலுத்தப்பட்ட தொகை

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படாத பதவி இழப்பு தொடர்பில், நம்பிக்கை நிதியத்திலிருந்தான (ஒழுங்குபடுத்தப்படாத நிதியம் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படாத நிதியம்) கொடுப்பனவு, ஏனைய கொடுப்பனவுகள் அல்லது ஏதேனும் ஓய்வுக்கான பணமற்ற நன்மை என்பவை நியம (அதிகரித்துச் செல்லும்) வரி வீதத்திற்கு உட்படும்.

இணைப்பு 6– முடிவுறுத்தல் நன்மைகளுக்கு ஏற்புடைய சலுகை வீதங்கள்

ஊழியத்திலிருந்தான மொத்த முடிவுறுத்தல் நன்மைகள்	**செலுத்தப்படத்தக்க வரி**
முதல் ரூபா *10,000,000*	*0%*
இரண்டாவது ரூபா. *10,000,000*	*6 %*
மீதியில்	*12%*

இணைப்பு 7 – நியம (அதிகரித்து செல்லும்) வருமான வரி வீதங்கள் – வரிமதிப்பீட்டாண்டு 2024/ 2025

	வரியிடற்பாலதான வருமானம்	**வரி வீதம்**
2024/2025 ஆம் வரி மதிப்பீட்டாண்டு (2023, ஏப்ரல் 01 முதல் 2025 மார்ச் 31 வரையில்)	முதல் ரூ. *500,000* இனை விஞ்சாத	*6%*
	இரண்டாம் - ரூபா *500,000* தாண்டிய போதிலும் ரூபா 1,000,000 விஞ்சாத	*12 %*
	மூன்றாம் - ரூபா *1,000,000* தாண்டிய போதிலும் ரூபா 1,500,000 விஞ்சாத	*18%*
	நான்காம் - ரூபா *1,500,000* தாண்டிய போதிலும் ரூபா 2,000,000 விஞ்சாத	*24%*
	ஐந்தாம் - ரூபா *2,000,000* தாண்டிய போதிலும் ரூபா 2,500,000 விஞ்சாத	*30%*
	மீதித் தொகையில்	*36%*

ஏனைய சிறப்பு வரி வீதங்கள்

பந்தயம் மற்றும் சூதாட்டம், மதுபானம் அல்லது புகையிலை உற்பத்திகளின் உற்பத்தியும் விற்பனையும் அல்லது இறக்குமதியும் விற்பனையும் *(*வாங்கி விற்றல் தவிர்ந்த*)* என்பவற்றை உள்ளடக்கிய வியாபாரம் – ***40%***

சிறப்பு குறிப்புகள்

மேற்கூறப்பட்ட வழிகாட்டல்களுக்கு மேலதிகமாக, வரிசெலுத்துநர்கள் **www.ird.gov.lk** என்ற உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைதளத்தில் காலகத்திற்கு காலம் பிரசுரிக்கப்படும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் வருமான வரி தொடர்பிலான சுற்றறிக்கைகளையும் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்

தொடர்பு விபரங்கள்

மேலதிக விபரங்களுக்கு, செயலகத்தின் ஆணையாளர் அல்லது ஏற்புடைய பிராந்திய அலுவலக ஆணையாளரை தொடர்பு கொள்ளவும்.

தலைமை காரியாலயம்	செயலகம்	0112135413 0112135438 0112135434 0112135441 0112135433 0112135430
நகரக் கிளை	கொழும்பு நகர்	0112504390
நகரக் கிளை	கொழும்பு மத்தி	0112505274
நகரக் கிளை	கொழும்பு தெற்கு	0112502564
நவம் மாவத்தை	அலகு *1 & 2*	0112302249
பிராந்திய அலுவலகம்	அநுராதபுரம்	0252235512
பிராந்திய அலுவலகம்	பதுளை	0552222490
பிராந்திய அலுவலகம்	மட்டக்களப்பு	0652222087
பிராந்திய அலுவலகம்	தம்புளை	0662283655
பிராந்திய அலுவலகம்	காலி	0912222504
பிராந்திய அலுவலகம்	கம்பஹா	0332234246
பிராந்திய அலுவலகம்	யாழ்ப்பாணம்	0212222076
பிராந்திய அலுவலகம்	களுத்துறை	0342222216
பிராந்திய அலுவலகம்	கண்டி	0812223590
பிராந்திய அலுவலகம்	கேகாலை	0352222493
பிராந்திய அலுவலகம்	குருணாகலை	0372222798
பிராந்திய அலுவலகம்	மஹரகம - கிழக்கு	0112803127
பிராந்திய அலுவலகம்	மஹரகம - மேற்கு	0112803125
பிராந்திய அலுவலகம்	மாத்தறை	0412222933
பிராந்திய அலுவலகம்	நீர்கொழும்பு	0312228322
பிராந்திய அலுவலகம்	நுவரெலியா	0522222520
பிராந்திய அலுவலகம்	இரத்தினபுரி	0452222040

விளக்கங்கள்

உதாரணம் *1*

திருமதி ரேணுகா ஹெட்டியாரச்சி அவர்கள் BOP கம்பனியின் தலைமை நிதி உத்தியோகத்தர் ஆவார். 2024/2025 ஆம் வரி மதிப்பீட்டாண்டில் அவரது வருமானம் பின்வருமாறு;

- *ஊழிய வருமானம் ரூபா 7,500,000 (முதல் ஒன்பது மாத கால எல்லைக்காக முற்பண தனியாள் வருமான வரி கழிப்பதற்கு விருப்பம் வழங்கப்பட்டுள்ளது)*
- *வியாபார வருமானம் ரூபா 10,000,000 (அனுமதிக்கத்தக்க செலவினங்களை கழித்த பின்னர்). நிலையான வைப்பிலிருந்தான மொத்த வட்டி வருமானம் ரூபா 8,000,000 (5% இல் மு.வ.வரி கழிக்கப்பட்டுள்ளது)*
- *வாடகை வருமானம் ரூ. 1,900, 000 (10% இல் மு. வ. வரி கழிக்கப்பட்டுள்ளது)*
- *ஏனைய வருமானம் ரூ. 1,500, 000*
- *சூரிய கலம் பொருத்தப்பட்டு 2024.04.01 தொடக்கம் 2025.03.31 வரை தேசிய மின் வழங்கல் தொகுதியிற்கு மின்சாரத்தினை வழங்குவதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 200,000 ஆகும்.*

ஊழிய வருமானம் காசு மற்று காசற்ற நன்மைகளை உள்ளடக்கியுள்ளது. அவர் புதிய உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மாவட்ட வைத்தியசாலைக்கு ரூ. 75,000 இணை நன்கொடையாக வழங்கியுள்ளார். இதற்கு மேலதிகமாக இந்த மதிப்பீட்டாண்டு சமூர்த்தி நன்மை பெறும் குடும்பத்தில் பெண் ஒருவருக்கு கடை ஒன்றை தாபிப்பதற்கு ரூபா 800,000 இனை (ரூபா 500,000 பணமாகவும் ரூபா 300,000 இற்கு பொருட்களாக – சீமெந்தாக) வழங்கியுள்ளார். இவற்றுக்கு மேலதிகமாக அவர் தனது வதிவிட வளவில் 2024.08.01 அன்று, ரூபா 2,000,000 செலவில் சூரியகலங்களை தமது வீட்டு வளாகத்தில் பொருத்தப்பட்டிள்ளதுடன் அவர் ஏற்கனவே வருடம் ஒன்றிற்கு ரூபா 60,000 வீதம் கடந்த 03 மதிப்பீட்டு ஆண்டுகளுக்குள் ரூபா 1,800,00 தகமையளிக்கும் கொடுப்பனாவாக கழிக்கப்பட்டுள்ளது. தேசிய மின் கட்டமைப்பிற்கு இணைப்பை வழங்கியுள்ளார். மேலும் இவர் இந்த வரி மதிப்பீட்டாண்டில், இலங்கை தேசிய கூட்டுத்தாபனத்தினால் அங்கிகாரமளிக்கப்பட்ட திரையரங்கு மேம்பாட்டிற்காக புதிய கருவிகளை கொள்வனவு செய்வதற்கு ரூ. 15,000,000 இனை செலவழித்துள்ளார்.

2024/2025 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கு திருமதி ரேணுகா அவர்களின் வருமான வரி பொறுப்பின் கணிப்பீடு பின்வருமாறு.

வருமான வரி பொறுப்பின் கணிப்பீடு

		ரூபா
ஊழிய வருமானம்		*7,500,000*
வியாபார வருமானம்		*10,000,000*
முதலீட்டு வருமானம் • வட்டி வருமானம் • வாடகை வருமானம் • ஏனைய வருமானம் • சூரிய கலம் மூலம் மின் வழங்கல்		*8,000,000* *1,900,000* *1,500,000* *200,000*
வரியிடற்பாலதான வருமானம்		***29,100,000***
கழிப்பனவுகள்-நிவாரணங்கள்		
• செலவினம் நிவாரணம்	ஏற்புடையதாகாது	
• வாடகை நிவாரணம்		*(475,000)*
• தனிப்பட்ட நிவாரணம்		*(1,200,000)*
• சூரியகலம் மீதான நிவாரணம்	*(மீதி மட்டம் 200,000/=*	*(200,000)*
கழிப்பனவு- தகைமையளிக்கும் கொடுப்பனவு		
• நன்கொடைகள் • சமூர்த்தி உதவி பெறும் பெண்ணிற்கு கடை ஒன்றனைத் தாபித்தல் • சினிமாவிற்கான உபகரணங்கள்	***நிதி மூலம் 500,000/=*** ***சீமேந்து 300,000/=***	*(75,000)* *(800,000)* *(15,000,000)*
வரி அறவிட முடியுமான வருமானம்		***11,350,000***
வரி பொறுப்பு	*500,000 x 6 %= 30,000*	
	500,000 x 12 %= 60,000	
	500,000 x 18 %= 90,000	
	500,000 x 24 %= 120,000	
	500,000 x 30 %= 150,000	
மொத்த வரி பொறுப்பு *(2024/2025)*	*மீதி 8,850,000 x 36% = 3,186,000*	*3,636,000*

காணப்படும் வைப்பு கழிப்பனவு (APIT)		*1,818,000*
வட்டி மீதான (WHT)		*400,000*
செலுத்தப்படற்பாலதான வரி		*1,418,000*

உதாரணம் *2*

பேராசிரியர் திமித்ரி இலங்கை பேராதனைப் பல்லைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற் இணைப்பு செய்து சேவையாற்றுகின்றார். அதே வேளை அவர் ***NARA*** **நிறுவனத்திற்கு** ஆலோசனை சேவை வழங்குவதுடன் அதற்கு மாதாந்த அடிப்படையில் கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்கிறார். *2024/2025* ஆம் வரி மதிப்பீட்டாண்டிற்கு **பேராசிரியர் திமித்ரியின்** வருமானம் பின்வருமாறு.

- **பொறியியல்** பீடத்திலிருந்தான ஊழிய வருமானம் *(முதன்மை ஊழியம்)* ரூ. *9,000,000*
- ***NARA*** **நிறுவனத்திற்கு** ஆலோசனை சேவை கட்டண வருமானம் *(இரண்டாம் ஊழியம்) 2024.04.01* இருந்து *2025.01.31* வரையான வருமானம் ரூ. *5,000,000*
- மொத்த வட்டி வருமானம் ரூபா, *4,500,000 (மு.வ.வரி 5%* இல் கழிக்கப்பட்டுள்ளது*)*
- வாடகை வருமானம் ரூபா. *1,800,000 (வர்த்தக கட்டிடம் வியாபாரத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டதிலிருந்தான)*
- சூர்ய கலன் பொருத்தி *2024.04.01*தொடக்கம் *2025.03.31* வரைதேசிய மின் வழங்கல் தொகுதியிற்கு மின்சாரம் வழங்குவதன் மூலம் பெற்ற *(வேறு)* வருமானம் ரூபா *360,000/=*
- *2025* பெப்ரவரியில் வதிவுள்ள கம்பனியிடமிருந்தான பங்கிலாப வருமானம் ரூ. *500,000 (15%* வீதம் முதலீட்டு வருமானத்தில் இருந்து நீக்கப்ப,ட்ட முற்பண வருமான வரி கழிக்கப்பட்டுள்ளது */* இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவு*)*

ஊழிய வருமானம் காசு மற்றும் காசற்ற நன்மைகளை உள்ளடக்கியது. கடந்த மதிப்பீட்டாண்டில் தேசிய மின் வழங்கல் தொகுதியிற்கு தொடர்பட்ட அவர் தனது வதிவிட வளவில் ரூ. 1,000,000 செலவில் சூரிய கலத்தினை பொருத்தி அதனை தேசிய கட்டமைப்புக்கு இணைக்கப்பட்டுள்ளது.பொகவந்தளை மகா வித்தியாலயத்திற்கு (அரச பாடசாலை) ரூ. 250,000 இனை நன்கொடை யாவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட தர்மஸ்தாபனத்திற்கு ரூ. 200,000 இனை நன்கொடையாகவும் அளித்திருந்தார்.

வருமான வரிப்பொறுப்புக்களை கணிப்பீடு செய்தல்.

		ரூ.
ஊழிய வருமானம்		*9,000,000*
ஆலோசனை கட்டணம்		*5,000,000*
முதலீட்டு வருமானம்		
வட்டி வருமானம்		*4,500,000*
வாடகை வருமானம்		*1,800,000*
ஏனைய வருமானம்		*360,000*
பங்கிலாப வரிமானம்	*(15%இல் வரி செலுத்தப்பட்டதால் விலக்கப்பட்டுள்ளது)*	*500,000*
வரியிடற்பாலதான வருமானம்		***20,660,000***
கழி - நிவாரணம்		
• வாகை நிவாரணம்		*(450,000)*
• செலவின நிவாரணம்		
• முன் கொண்டு வரப்பட்ட சூரிய கலம் நிறுவுதல்		*(400,000)*
• தனிப்பட்ட நிவாரணம்		*(1,200,000)*
கழி – தகமை பெறும் கொடுப்பனவுகள்		
• நன்கொடை • அரச பாடசாலைக்கான நன்கொடை	அனுமதிக்கபட்ட தர்மஸ்தாபனம்	*(75,000)* *(250,000)*
வரியிடற்பாலதான வருமானம்		***18,285,000***
வரிப்பொறுப்பு	*500,000 x 6 %= 30,000*	
	500,000 x 12 %= 60,000	
	500,000 x 18 %= 90,000	
	500,000 x 24 %= 120,000	
	500,000 x 30 %= 150,000	

	15,035,000 X 36% = 5,682,600	
செலுத்த வேண்டிய மொத்த வரி (2024/2025)		***6,132,600***
கிடைக்கத்தக்க வரி வரவுகள் *கழி - மு.த.வ.வ (ஆரம்ப மற்றும் இரண்டாம் ஊழியம்)* • *வட்டி மீதான மு.த.வ.வ* • *வாடகை மீதான மு.த.வ.வ. (10% இல்)* • *காலாண்டுக் கொடுப்பனவுகள்*		*4,158,000* *225,000* *180,000* *800,000*
செலுத்தப்படற்பாலதான வரி		***769,000***